உ

திருச்சிற்றம்பலம்

ஶ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகளின் சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்



தமிழில் மொழிபெயர்த்து இயற்றியது

யாழ்ப்பாணத்து வடகோவை

வித்துவான் **சபாபதி நாவலர்** அவர்கள்

மறுபதிப்பும் - வெளியீடும்

ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம்

கள்ளக்குறிச்சி - 606202.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

மூலநூலாசிரியர்

ஸ்ரீஹரதத்தாசாரிய சுவாமிகள்

கத்தியரூப

சதுர்வேததாற்பரிய சங்கிரகம்

[சுமார் 100 ஆண்டுகளுக்கு பிறகு மறுபதிப்பு]

யாழ்ப்பாணத்து வடகோவைச்
சுயம்புநாதபிள்ளை குமாரராகிய

வித்துவான் **சபாபதிப்பிள்ளை**

மொழிபெயர்த்தியற்றியது

இஃது

*அவர் மாணாக்கர் ச.சிவப்பிரகாச பிள்ளையால் காரைக்காலிலுள்ள
அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.*

முதற் பதிப்பு : தாது-ஹு சித்திரை-மீ

*ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருஷம் சித்திரை மாதம்-14 (27-04-2019)
சனிக்கிழமை - சித்திரைத் திருவோணம் ஸ்ரீநடராஜர் அபிஷேக
நன்னாளில்* **திருவாவடுதுறை ஆதீனம் 24-ஆவது
குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்** *திருக்கரங்களால் வெளியிடப்பட்டது.*

மறுபதிப்பும் - வெளியீடும்

ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம்

கள்ளக்குறிச்சி-606 202.

ஸ்ரீவிகாரி வருடம் 2019

நூல் விபரங்கள்

நூல் பெயர் : சதுர்வேத்தாற்பரிய சங்கிரகம்
நூல் ஆசிரியர் : சு.சபாபதிப்பிள்ளை
நூலின் வகை : சைவசமயம் - சிவபரத்துவம்
முதல் பதிப்பு : தாது வருடம்
மறு பதிப்பு : ஸ்ரீவிகாரி வருடம், சித்திரைத் திருவோணம் நடராஜர் திருமஞ்சன நாள் (27-04-2019)
நூலின் அளவு : 1/8 டெம்மி
பக்கங்கள் : 48 தாள் : 13.7
எழுத்து : 12 புள்ளிகள் படிகள் : 1000
விலை : ரூ. **50/-**
நூல் அமைப்பும் பதிப்பும் : ஸ்ரீகணநாதநாயனார் நூலகம், திருச்சிராப்பள்ளி
இரண்யவன்மன் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி
கிடைக்குமிடங்கள் : சிவஸ்ரீ தில்லை எஸ். கார்த்திகேயசிவம்
நிறுவனர், ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம்
ஸ்ரீராமச்சந்திரா நகர், நீலமங்கலம் கூட் ரோடு,
கள்ளக்குறிச்சி-606 202. செல் : 97518-48933.

மு.ஜயக்குமார்
ஸ்ரீகணநாத நாயனார் நூலகம்
39/22, கிருஷ்ணாபுரம் முதல் தெரு,
திருச்சிராப்பள்ளி - 620 008.
செல் : 99528-06121

பொருளடக்கம்

அச்சாக்கம் : ஆர்.ஜி.பிரிண்டர்ஸ்
சின்னக்கடைத்தெரு, திருச்சிராப்பள்ளி-2. போன் : 0431-2700417.



திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்து நான்காவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்
திருவாவடுதுறை (அஞ்சல்) - 609 803, நாகை மாவட்டம். தொலைபேசி : 04364 - 232021



அருள் வாழ்த்துரை

''வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே''. - *அப்பர் தேவாரம்*

கள்ளக்குறிச்சி ஆதிசைவர்கள் நலவாழ்வு மையத்தின் சார்பில் சிவஸ்ரீ, தில்லை எஸ்.கார்த்திகேயசிவம் அவர்கள் சதுர்வேததாற் பரிய சங்கிரகம் என்ற நூலினை மறுபதிப்பு செய்து வெளியிடுதல் அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஸ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகளால் வடமொழியில் செய்யப் பெற்ற இந்நூல் நமது ஆதீன வித்வான் சபாபதி நாவலர் அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்றது. நம் ஆதீன வெளியீடாக வந்துள்ளது. நீண்ட இடைவெளிக்குப் பின் இந்நூல் சைவ உலகிற்குப் பெரிதும் பயன்படும் தன்மை அறிந்து மறு பதிப்பு செய்து வெளி யிடுதல் பாராட்டத்தக்கது.

''வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்'' என்று திருமந்திரமும் ''வேத நூல் சைவ நூல் என்றிரண்டே நூல்கள்'' என்று சிவஞான சித்தியாரும் கூறுவதால் வேதம் குறித்த தெளிவு சைவர்கள் யாவருக்கும் இருக்க வேண்டும். இந்நூல் வேதத்தின் தெளி பொருளைச் சிறப்பாக உணர்த்தும்.

இந்நூல் அடியார்கள் அனைவருக்கும் பயன்பட்டு நான்மறைச் சைவம் தழைத்தோங்க வேண்டி நமது ஆன்மார்த்த மூர்த்திகளாகிய ஸ்ரீ ஞான மாநடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை

Phone No. 0435 - 2456655

உ
Siva Siva

SRI KASI MUTT

"Kailaimaamunivar" Sri La Sri Kasivasi MUTHUKUMARASWAMI THAMBIRAN Swamigal,
Head of Sri Kasi Mutt, Thiruppanandal - 612 504, Thanjavur District, Tamil Nadu.

வாழ்த்துரை

"விரித்தவன் நான்மறையை"

"வேதநாயகன்"

"ஒலி சிறந்த வேதியர் வேதமும்"

ஆவன ஐயாறன் அடித்தலமே என்றெல்லாம்

சமயகுரவரும்,

"வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்" முடிக்கும் என்று ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளும் பரம்பொருளையும் நான்மறைகளும் ஒருங்கு கூட்டி உயர்த்தி போற்றியுள்ளனர். பின்னாளைய இந்நாளைய நுண்ணிய ஆய்வுகளுக்கு நிலைக் களனாய் விளங்கும் விரிந்த பரப்பு மிக்க வேதங்களின் உட்பொருளை விளக்குவதாய் ஸ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகள் மூலநூல் படிக்க வித்துவான் யாழ்ப்பாணத்து சபாபதிபிள்ளை மொழியாக்கம் செய்திட 100 ஆண்டுகளுக்கு முன் பதிப்பிக்கப் பெற்ற "கத்தியரூப சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்", (சுருதி ஒத்த மாலை) மீண்டும் பதிப்புச் செய்யப்பெறுவதும் கள்ளக்குறிச்சி, தில்லை சிவஸ்ரீ எஸ்.கார்த்திகேயசிவம் முயற்சியில் அது வெளிவருவதும் அறிய மகிழ்ச்சி.

ஆழங்கண்டு அளந்திட முடியாத விரிந்த நெடும் பரப்புடைய அருமறைகளின் உட்பொருளை அழகுற எளிய நடையில், எண்பொருளவாகச் செலச் சொல்லியுள்ள நுட்பமிக்க நூல் சிறிய தாயினும் தான் விளக்கும் பொருளால் பெருமையுடையதாய் பொருட்செறிவு மிக்கதாய் விளங்கிப் பலர்க்கும் விருப்பம் கூட்டும் நூலாய் மலர்ந்திடச் செந்நிறகந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம். சுபம்

சிவசிவ



Sivamayam
SIVAGAMA KALANITHI, SIVAGAMA CHELVAR, SAIVA SIDHDHANTHA SARABHAM
A.V.SWAMINATHA SIVACHARIYAR
FOUNDER & PRINCIPAL
SIVAPURAM VEDA SIVAGAMA PATASALAI, MAYILADUTHURAI.
Email: avssivachariyar@yahoo.com Web Site: www.sivapuramtrust.com

Resi:
No.41, 4th Cross Anna Nagar,
Dharmapuram Road,
Mayiladuthurai - 609 001.
Tamilnadu, India.
Cell:9443126440

Patasalai:
No.32, Mayuranathar South Street,
Mayiladuthurai - 609 001.
Ph:04364 - 241491
Cell: 9443489491

Date: ....

அணிந்துரை

நம்பனே நான்மறைக ளாயி னானே
 நடமாட வல்லானே ஞானக் கூத்தா
கம்பனே கச்சிமா நகரு ளானே
 கடிமதில்கள் மூன்றினையும் பொடியா எய்த
அம்பனே அளவிலாப் பெருமை யானே
 அடியார்கட் காரமுதே ஆனே றேறுஞ்
செம்பொனே திருச்சோற்றுத் துறையு ளானே
 திகழொளியே சிவனேயுன் அபயம் நானே.

- திருநாவுக்கரசு சுவாமிகள்

சுருதி சூக்தி மாலா என்கின்றதான சதுர்வேததாத்பர்ய ஸங்கிரஹம் எல்லாம் வல்ல உமையொருபாகனுடைய திருவருளும், குருவருளும் துணை நிற்க மீண்டும் வெளிவருவது மிக்க மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

''சைவத்தின் மேற் சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம்
தெய்வத்தின்மேல் தெய்வம்இல்லெனும் நான்மறைச் செம்பொருள்
வாய்மை வைத்தசீர்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள் எம்உயிர்த்துணையே''

என்பது ஆன்றோர் வாக்கு. நான்மறைச் செம்பொருள் வாய்மை வைத்த சீர் என்பது நான்மறைகள் கூறும் உண்மை யான பொருளைச் சொல்லுவதுதான் நமது சித்தாந்த

சைவத்தினுடைய திருமுறைகளாகும். நான்மறைகளின் பொருளாக இருப்பவர் சிவபெருமான். இதை ஞானசம்பந்தர் முதலிய ஆச்சார்ய பெருமக்கள் பலவாற்றானும் எடுத்துரைக் கின்றனர். **'வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆகினான்'** என்று குறிப்பிடுகின்றார் நாவுக்கரசர். **'வேதம் நான்கினும் மெய்பொருளாவது நாதன் நாமம் நமசிவாயவே'** என்ற திருவாக்கின் அடிப்படையில் வேதத்தில் சொல்லப் படுகின்ற சொற்கள் எல்லாமே சிவபெருமானைத் தான் குறிப்பிடுகிறது என்று தருமை ஆதீனத்தில் முதன்முதலாக நடைபெற்ற மெய்கண்டார் மாநாட்டில் நம்முடைய போற்றுதற் குரிய பழனி ஈசான சிவாச்சாரியார் சுவாமிகள் அவர்கள், பலசொற்களை மேற்கோள் காட்டி அவை சிவபெருமானையே குறிக்கிறது என்று ஒரு ஆய்வு கட்டுரையை வெளியிட்டிருக் கிறார்கள். இன்னும் பலரும் அந்த மாநாட்டிலே இதுபோன்ற கட்டுரைகள் சமர்ப்பித்து இருக்கின்றார்கள். இந்த நிலையை நமக்கு உணர்த்தியவர்கள் நம்முடைய ஆச்சார்யர்கள் பலர்.

நம்முடைய வேதங்களையும் ஆகமங்களையும் அருளிச் செய்தவர் சிவபெருமான். பின்னால் வழிநூல்களை பத்ததிகளாக அருளிச்செய்த ஆச்சார்யர்கள் பதினெட்டுபேர், ஈசானர், தத்புருஷர், அகோரர், வாமதேவர், ஸத்யோஜாதர், சோமசம்பு, வருண இந்தமாதிரியான பத்ததி ஆச்சார்யர்கள் இருக்கிறார்கள். அதுவல்லாமலும் நிகமக்ஞான சிவாச்சாரியார் த்ரிலோசன சிவாச்சாரியார் போன்றவர்கள் படைத்துள்ள ஆகம வழி நூல்கள் ஏராளம். இவர்கள் சுத்த சித்தாந்த சைவர்கள் நம்முடைய ஆச்சார்ய பரம்பரையிலே வந்தவர்கள். பெருமானுடைய திருவருளினாலே நம்முடைய சமயம் சாராத பலரும் நம்முடைய சைவசமயத்தை வெளிஉலகிற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். இதைத்தான் **''அப்பாலும் அடிச் சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்''** என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குறிப்பிடுகின்றார். நம்முடைய சமயம் அல்லாத மற்ற சமயங்களிலேஇருந்து நம் சிவபெருமானுடைய திருவடிகளைச் சார்ந்தவர்களை அப்படி குறிப்பிடுகின்றார். அதுபோல வைணவத்திலே பிறந்தவர் கஞ்சனூர் ஸ்ரீமத் ஹரதத்தாசாரியார் ஆவார். அவருடைய பெற்றோர்கள். பரம வைணவர்கள். ஆனால் அந்த குழந்தைக்கு ஐந்து வயதிலேயே தக்ஷிணாமூர்த்தியினுடைய அனுகிரஹத்தி

னாலே மேதா ப்ரக்ஞானம் வந்துவிஷ்ணு பரம்பொருள் கிடையாது. **சிவபெருமான்தான் பரம்பொருள்** என்று உரைக்கத் துவங்கியது. அது கஞ்சனூரிலே நிகழ்ந்த ஒரு அற்புதம்.

இதனால் அவர் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டார். சிவபெருமானே பரம்பொருள் என்பதை உணர்த்துவதற்காக அவர் பட்ட சிரமங்கள் சோதனைகள் எண்ணிலடங்காதவை. ஸ்ரீமத் ஹரதத்த ஆச்சார்யர் என்று அவருக்கு சைவர்கள் திருநாமம் அளித்து போற்றி வணங்கக்கூடிய ஒரு அற்புதம் நிகழ்ந்தது. கஞ்சனூரில் இருந்த அந்தணர்கள் மற்றும் வைணவர்கள் அவரைப்புறம் தள்ளினார்கள். அதைப்பற்றி அவர் கவலைப் படாமல் **சிவமே பரம்பொருள்** என்று அக்னீஸ்வர பெருமானு டைய திருக்கோயிலிலே நாளும் பெருமானை வழிபட்டு ஆத்மார்த்த சிவபூஜை எல்லாம் செய்யதுவங்கி இருக்கின்றார். சிவாச்சாரியார்களும் அவருடைய சைவ நிலைப்பாட்டை உணர்ந்து அவரை பெரிதும் பாராட்டி இருந்திருக்கின்றார்கள். அப்போது மற்றவர்களினால் புறம் தள்ளப்பட்ட ஸ்ரீமத் ஹரதத்தா சார்யார் பல கிரந்தங்கள் சிவபரத்துவத்தை நிலைநாட்டி எழுதியிருக்கின்றார். அதில் மிக உயர்ந்தது **சுருதி சூக்திமாலா** என்று சொல்லப்படுகின்றதான **சதுர்வேத தாத்பர்ய சங்கிரஹம்** எனும் நூலாகும். வைணவர்கள் ஒரு கட்டத்திலே சொன்னார்கள். 'நீ இப்படியெல்லாம் சொன்னால் சிவபரத்துவத்தை ஏற்க முடியாது! ஒரு பழுக்க காய்ச்சிய முக்காலி (இரும்பு ஸ்டூல்) அதன்மேல் ஏறிநின்று சிவன் தான்பரம்பொருள் என்றுசொல், அப்போது நாங்கள் உன்கூற்றை ஏற்றுக்கொள்கிறோம்' என்று சொன்னார்கள். ஆச்சார்யர்கள் இதுபோல் பல அற்புதங்களை நமக்கு நிகழ்த்தி காட்டியிருக்கிறார்கள்.

சமணர்களை எதிர்த்து நாவுக்கரசர் வெளியேறிய போது கல்லிலே கட்டி அவரை கடலிலே வீசினார்கள். "கற்றுணைப் பூட்டியோர் கடலினுள் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று நாவுக்கரசர் பாடுகின்றார். கொதிக்கும் சுண்ணாம்பு காலவாயிலே போடுகின்றார்கள். அது அவருக்கு குளிர் சாதன அறையாக மாறியது. "மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிளவேனிலும்" என்று அந்த சுண்ணாம்பு காலவாயிலே இருந்து பாடுகின்றார். இவை

யெல்லாம் சிவபெருமானுடைய திருவருளினாலே நிகழ்கின்ற அற்புதங்கள்.

அதுபோல ஹரதத்தாசார்யார் அந்த பழுக்க காய்ச்சிய முக்காலியின் மீது ஏறி நின்றவுடன் அது குளிர்ந்துவிட்டது. அதில் நின்று அவர் சத்தியப்பிரமாணம் செய்கின்றார். சிவமே பரம்பொருள் மற்றைய தெய்வங்களெல்லாம் அவரால் ஒடுக்கப்பட்ட தெய்வங்கள்தான் என்பதனை அவர் உரக்கச் சொல்லுகின்றார். சிவபெருமானுடைய திருவருளினாலே அவருடைய வாக்கை அனைவரும் ஏற்றார்கள். அவரும் ஸ்ரீமத் ஹரதத்தாசார்யார் எனப் போற்றப்படத் துவங்கினார். அந்த அடிப்படையிலே நான்கு வேதங்களும் உணர்த்துவது சிவ பெருமானைத்தான் என்பதைத்தான், அவர் நூற்றைம்பது ஸ்லோகங்களிலே சுருதி சூக்தி மாலா எனும் சதுர்வேத தாத்பர்ய ஸங்கிரஹம் என்ற நூலாக உரைத்திருக்கின்றார். 151வது ஸ்லோகத்தை இந்நூலின் சாரமாகச் சொல்லி நூலை நிறைவு செய்ததருளியிருக்கின்றார்.

சுருதி என்று சொன்னால் வேதங்கள், சூக்தி என்று சொன்னால் அழகாக சொல்லுகின்ற வாக்கியங்கள் அந்த வேதங்கள் சொல்லுகின்ற அழகான வாக்கியங்கள் சொற்கள், பெயர்கள் இவைகளை சிவபரத்துவமான ஒரு மாலையாகச் செய்ததுதான் "சுருதி சூக்தி மாலா" என்று அவர் செய்த கிரந்தத்திற்கு பெயர் விளக்கம் தருகின்றார். பின்னாளில் அதற்கு உரை எழுதியிருக்கின்ற மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருத கல்லூரி யினுடைய முதன்மை உபாத்யாயகர் சாம்பவஸ்ரீ பால சுப்ரமண்ய சாஸ்திரிகள்.

"பஞ்சா சதுத்தரசதா - சுருதி ஸூக்திமாலா
போகாவளீ புஜகஹார மனோஹரா தே।
வேதேஷு பக்தி மபராகம வைதிகேஷு
தந்த்ரேஷு பக்தி மதுலாம் த்வயி சப்ரஸூ தே"।।

என்று 151வது ஸ்லோகத்தில் ஸ்ருதி சூக்தி மாலா என்று இந்த நூலுக்கு பெயர் என்பதைப் பதிவு செய்கின்றார்.

போகாவளீ = பெருமானுடைய புகழை மாலையாகச் சொல்லுகின்ற இந்த நூல், புஜகஹார மனோஹரா தே = நாகாபரணம் பூண்டிருக்கின்ற எம்பெருமானுக்கு சந்தோஷப் படுத்தக் கூடியதாக இருக்கின்றது. என்பதனை அவர் உணர்த்துகின்றார். வேதேஷுபக்திம் = வேதத்தில் பக்தி வேணும். அவைதிகேஷு தந்த்ரேஷு அபராகம் = பொய்யுரைகள் கூறுகின்ற நூல்களை புறந்தள்ள வேண்டும். ஆதிகாலத்தில் ஹிந்துமதம் என்று ஒரு மதம் கிடையாது. அறுவகை சமயங்கள் கிடையாது. பெயர் கிடையாது. பெயர்கள் வருவதற்கு முன்னமே தோன்றியது சைவ வழிபாடு. "ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ" என்று நாவுக்கரசப் பெருமான் திருவாரூரிலே பாடுகின்றார். ஆகையினாலே இந்த உலகம் தோன்றுவதற்கு முன்னமேயே சிவபெருமான் திருவாரூரை கோயிலாக கொண்டு இருக்கிறார் என்ற ஒரு குறிப்பைப் பார்க்கின்ற பொழுது மொழி, மதம், இனம் இவைகள் தோன்றுவதற்கு முன்னமே சிவவழிபாடு என்பதை பெருமான், உயிர்கள் மீது கொண்ட கருணையினால் இந்த பூவுலகில் பதிவு செய்திருக்கிறார் என்பதைக் காய்தல் உவத்தல் இன்றி உணர்தல் அவசியம்.

அடுத்து அந்த வழிபாட்டு முறைகளைக் கூறும் முகத்தான் வேதங்களை அருளிச் செய்கின்றார். எல்லாமே அந்த சிவபரத்துவத்தைத்தான் குறிக்கின்றன. பின்னால் தோன்றிய சமயங்கள் தத்தமது கருத்திற்கு ஏற்ப திரித்தும் புனைந்தும் பலவாறாக உரைகள் கூறியிருக்கின்றன. அறிஞர்கள் தங்களுடைய வித்வத்துவத்தினாலே மற்றைய தெய்வங்களை முதன்மைப் படுத்தி வேதத்திற்கு உரையெழுதியிருக்கின்றார்கள், அதைத் தவறு என்று சுட்டிக்காட்டியவர்தான் ஸ்ரீமத் ஹரதத்தாசார்யார். இப்படி சுருதி சூக்தி மாலா என்ற ஒரு அழகான திருநாமத்தை கடைசியிலே பதிவு செய்கின்ற ஹரதத்தாசார்யார் தம்முடைய நூலினுடைய இரண்டாவது ஸ்லோகத்தில் இதற்கு சதுர்வேத தாத்பர்ய ஸங்கிரஹம் என்ற அந்த ஒரு பெயரையும் குறிப்பிடுகின்றார்.

"வேதேஷு வா தத னுயாயிஷு வா விசார்ய
தந்த்ரேஷு வாக்கிய மகிலம் ப்ரதிபாதகம் தே।
தாத்பர்ய சங்க்ரஹமஹம் விததே மஹேச
மஹ்யம் ப்ரஸீத நய மாம் ருஜுணாபதா த்வம்"॥

என்று இரண்டாவது ஸ்லோகத்தில் வேதத்தில் சொல்லப்படுகின்றதான தாத்பர்ய சங்கிரஹத்தை நான் செய்கின்றேன் என்று குறிப்பிடுகின்றார். ஆகையினாலே இரண்டு பெயர் இந்த நூலுக்கு அவருடைய திருவாயினாலேயே உரைத்திருக் கின்றார். சுருதி சூக்தி மாலா என்றும், சதுர்வேத தாத்பர்ய சங்கிரஹம் என்றும், இரண்டு பெயர்களை அவர் குறிப்பிட்டிருக்கின்றார். அற்புதமான நூல் இது. இந்த 151 ஸ்லோகங்களையும் முறையாகப் பயின்றவர்கள் நம்முடைய சித்தாந்த சைவத்தை, வைதீக சைவத்தை பூரணமாக அறியுமாறு அவர் உணர்த்தியிருக்கிறார். அவர் ஒரு வைணவராக இருந்து சைவ ஆச்சார்யராக நம்மால் போற்றப்படுகிறார் என்றால் அது ஒரு மிகையில்லை. ஏனென்றால் அவர் பிறந்த அந்த வைணவ குலத்தினுடைய ஸ்ரீமன் நாராயணர் நம்முடைய சைவ ஆச்சார்ய பரம்பரையிலே ஒருவராக வைத்துத்தான் போற்றப் படுகின்றார்.

"சதாசிவம் அனந்தஞ்ச ஸ்ரீகண்டம் புனரம்பிகாம்।
குஹம் விஷ்ணும்ச தாதாரம் குரூன் சப்த ஸமாச்ரயே"॥

என்று ஏழு குருமார்களில் விஷ்ணுவும் ஒருவர். ஆகமம் என்ற சொல்லுக்கு அர்த்தம் "ஆகதம் பஞ்ச வக்த்ராத்து கதஞ்ச கிரிஜா முகே। மதஞ்ச வாசுதேவேன" வாசுதேவராகிய அந்த மஹாவிஷ்ணுவினாலே மதித்து போற்றப்பட்டு அந்த வழி நின்று பூஜைகளை செய்யப்பட்ட பெருமை உடையது இந்த ஆகமங்கள். அதனால் பின்னால் வந்தவர்கள் சொல்கிறார்களே என்பதினாலே ஒரு உண்மை பொய்யாகிடாது, ஒரு பொய் உண்மையாகவும் மாறாது. இதை உறுதிப்படுத்துகிறார் ஸ்ரீமத் ஹரதத்தாசார்யார்.

அந்த நிலையிலே அவர் அந்த வேதத்தினுடைய உண்மைப் பொருளை நமக்கு உணர்த்துமாறு அருளிய இந்த சுருதி சூக்தி

மாலா என்ற நூல் பல பெரியோர்களினாலே அந்தந்த காலத்திற்கு ஏற்றவாறு உரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. அவர் எழுதிய 151 ஸ்லோகத்திற்கும் ஸம்ஸ்க்ருதத்திலேயே சிவலிங்க பூபதி என்கிற ஒருமகான் வியாக்கியானம் செய்திருக்கிறார். அது எல்லோ ராலேயும் புரிந்துகொள்வது கஷ்டமாக இருக்கிறது என்பதால் மயிலாப்பூர் சம்ஸ்க்ருத கல்லூரியினுடைய முதன்மை உபாத்யாயகராக இருந்த சாம்பவஸ்ரீ.பாலசுப்ரமண்ய சாஸ்திரிகள் அவர்கள் சுருதி சூக்தி மாலா என்ற மூல கிரந்தத்திற்கும் சிவலிங்க பூபதி ஆச்சார்யார் செய்த சமஸ்க்ருத வ்யாக்யானத்திற்குமாக அருமையானதொரு தமிழ் உரை எழுதியிருக்கிறார்.

இது சற்றேறக்குறைய ஒரு நாற்பது வருடங்களுக்கு முன்பு வெளிவந்துள்ளது. அது மிகவும் விசேஷமாகவும் இருக்கிறது. அதில் பதவுரை, கருத்துரை. விசேஷ உரை என்று மூன்றாக ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் எழுதுகிறார். அந்த விசேஷமாக சொல்லப்படு கின்ற அவரது உரையில் ஆகம திருமுறை குறிப்புகளை ஏராளமாக உதாரணமாக எடுத்துச் சொல்லுவது ஒரு மிகப்பெரிய விஷயமாகக் காணமுடிகின்றது. இது ஒருபுறம் இருக்க சைவத்தின் ஒரு ஞான பூமியாக விளங்குகின்ற இலங்கைவாழ் தமிழர்கள் இன்று உலகம் முழுவதும் தமிழ் மற்றும்வைதீக சைவத்தை பரப்பிவருவது நாம் சொல்லி தெரியவேண்டியதில்லை. எல்லோரும் அறிந்த உண்மை நிறைய நூல்களை நமக்கு அருளியவர்கள் யாழ்ப்பாணத்து சைவர்கள், காசிவாசி செந்தில்நாதய்யர் சிவஞானபோத வாசனாலங்கார தீபம், தேவாரம் வேதசாரம் போன்ற நூல்களை அருளியவர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர்.

அதுபோல் அச்சுவேலி குமாரசாமிகுருக்கள் போன்ற மகான்கள்நிறைய நூல்களை நமக்கு அருளியிருக்கின்றார்கள். அந்த வழியிலே யாழ்ப்பாணம் சுயம்புநாத பிள்ளை அவர் களுடைய குமாரர் சபாபதி பிள்ளை அவர்கள் சற்றேறக் குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்பு கத்ய ரூபமாக சதுர்வேத தாத்பர்ய சங்கிரஹம் என்ற பெயரிலே அந்த நூலை தமிழிலேயே எழுதியிருக்கிறார். அது கிடைத்தற்கரிய நூலாகவும் இதுகாறும் நாம் அறியாத ஒரு விஷயமாகவும் இருந்து வந்திருக்கிறது.


நம்முடைய சிவஸ்ரீ தில்லை S. கார்த்திகேய சிவம் அவர்கள் அந்த நூலை தேடிக்கண்டுகொண்டு அதனை இப்பொழுது மறுபதிப்பாக வெளியிட முன்வந்திருப்பது பாராட்டுதலுக்குரியது. அவருக்கு சிவபெருமானுடைய திருவருளை தரக்கூடிய அற்புதசெய்தியாக இதைக்கண்டு மகிழ்கிறோம். சைவத்திரு சபாபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய சதுர்வேத தாத்பர்ய சங்கிரஹம், ஸ்ரீமத் ஹரதத்தாசாரியாருடைய சுருதி சூக்தி மாலாவினுடைய நேரடி தமிழ் மொழிபெயர்ப்பு அதனையும் குருமுகமாக பாடம் கேட்டால்தான் நாம் புரிந்துகொள்ள முடியும். எனவே பாடசாலைகளிலும் மற்றும் பள்ளிகளிலும் பாடத்திட்டத்திலே சேர்க்கக் கூடிய அளவிற்கு அந்தநூல் முழுமையான நூலாக கிடைத்திருப்பது சிவன் அருளேயாம்.

அதனை முழுமையாக அழகான முறையிலே மறுபதிப்பீடாக கள்ளக்குறிச்சி ஆதிசைவ நலவாழ்வு மையத்தின் சார்பாக சிவஸ்ரீ தில்லை S. கார்த்திகேய சிவம் அவர்கள் வெளியிடுகின்றார்கள். சைவத்தமிழுலகம் ஏற்றுப்போற்றவேண்டும் இந்நூல் உலகம் முழுவதும் மணம் பரப்பவேண்டும். இந்நூலை பயில்வோருக்கு சிவஞானம் உண்டாக வேண்டும். இந்நூலை இளைஞர்களுக்குப் பாடமாக நடத்த ஆச்சார்யர்கள் முன்வரவேண்டும். பயில்வதற்கு மாணவர்களும் முன்வரவேண்டும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்னும் ஆன்றோர் வாக்குப்படி இது சைவமணம் பரப்ப வேண்டும் என்று வாழ்த்தி, பெருமானுடைய திருவடிக் கமலங் களை வணங்கி, நூலை வெளியிடுகின்ற சிவஸ்ரீ தில்லை S. கார்த்திகேய சிவம் அவர்களுக்கு ஆசீர்வாதங்களை தெரிவித்து வாழ்த்தி மகிழ்கிறோம்.

சிவனருள் துணையுடன்

மயிலைடுதுறை
இந்தியா



(A.V.சுவாமிநாத சிவாசாரியார்)

பதிப்புரை

சிவஸ்ரீ தில்லை எஸ்.கார்த்திகேயசிவம்

நிறுவனர் : **ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம்** கள்ளக்குறிச்சி-606 202.

அன்புடையீர் வணக்கம்.

எல்லாம் வல்ல ஸ்ரீ தில்லைநாதன் திருவருளால் "சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்" என்ற இந்நூல் வெளியிடப்படுகின்றது. சிவமே பரம் என்று சிவபரத்துவத்தை நிலைநாட்டிய ஸ்ரீ ஹரதத்தாச்சாரியர் அருளிய நூல்களில் ஒன்று **"சுருதி சூக்த மாலை"** ஆகும். இந்நூலுக்கு **சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்** என்ற பெயரும் உண்டு.

பாண்டிய நாட்டு மன்னனாக இருந்தவர் சிவலிங்க பூபதி. சிறந்த சிவபக்தன். சாஸ்திர ஞானமும் இரு மொழிகளிலும் வல்லவராக விளங்கியவர். இம்மன்னன் சோழநாட்டை வென்று சிவலிங்க பூபாலச் சோழன் என்ற பட்டத்தோடு சோழநாட்டை ஆட்சிபுரிந்து வந்தான். அவ்வாறு ஆட்சி புரிந்துவரும் காலத்தில் கஞ்சனூர் திருத்தலத்தில் ஸ்ரீ ஹரதத்தர் "சிவபரத்துவத்தை" நிலை நாட்டி சைவசமய ஸ்தாபனம் செய்தருளிய செய்தியை அறிந்து, கஞ்சனூர் சென்று ஸ்ரீ ஹரதத்தர் திருவடிகளை வணங்கி அவர் ஆசிகளை வேண்டி நின்றான். ஸ்ரீ ஹரதத்தர் ஆசிகள் வழங்கி, தாம் அருளிய பஞ்சரத்ன மாலையின் ஸ்லோகங்களை எடுத்தியம்பினார்.

சிவலிங்க பூபதி மன்னன் தமக்கு சிவதீக்ஷை அளித்து சீடனாக ஏற்றுக்கொள்ள வேண்டினார். ஸ்ரீ ஹரதத்தர் பெருமானும் மன்னனுக்கு சிவதீக்ஷை அளித்து சிஷ்யனாக ஏற்றுக்கொண்டார்.

அந்நிலையில் மன்னன் தமது குருநாதர் ஸ்ரீ ஹரதத்தாரிடம் நான்கு வேதங்களிலும் உள்ள சைவ நுட்பங்களைத் திரட்டி ஒரு நூல் செய்து தரும்படி வேண்டினார்.

சிவலிங்க பூபதி மன்னன் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ ஹரதத்தாச்சாரியர் இயற்றிய நூலே "சுருதி சூக்த மாலை" என்ற வடமொழி நூலாகும்.

இந்நூலை தமது சிஷ்யன் சிவலிங்க பூபதிக்கு உபதேசித்து இந்நூலுக்கு ஒரு உரை எழுதுமாறு மன்னனுக்கு உத்தரவிட்டார். இவ்வாறு ஸ்ரீ ஹரதத்தர் அருளிய சுருதி சூக்த மாலை என்ற நூலுக்கு மன்னன் எழுதிய உரையே "சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்" என்று பெயர் உடைய நூலாகும். இந்நூலில் வேதங்களின் உண்மைத் தன்மையை அழகாக எடுத்துரைக்கின்றது. **'வேதங்களில் கூறப்படும் ஈஸ்வர சப்தம் பரம்**

பொருள் சிவபெருமானையே சுட்டுவது' என்றும், 'வேதங்கள் கூறும் பகவான் சிவபெருமானே' என்றும், 'வேத உபநிஷத்துகள் அனைத்தும் சிவபிரானையே உபாசனை செய்யக் கூறுகின்றது' என்றும், 'ஸ்ரீகாயத்திரி மந்திரப் பொருள் சிவபெருமானே' என்றும், பல வேதம் பற்றிய உண்மைகளை, இந்நூல் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

இக்காலத்தில் சைவசமயத்தில் வேதம் சார்ந்த சில குழப்பங் களுக்கு தகுந்த விளக்கம் அளிப்பதாக இந்த அருள் நூல் விளங்கு கின்றது. மிகச்சிறிய நூலாயினும் பல அரிய செய்திகளை எடுத்துரைக்கும் உண்மை நூலாகும்.

இந்நூலை திருவாவடுதுறை ஆதின மகாவித்வான் சபாபதி நாவலர் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்து அருளியுள்ளார்கள். அந்நூலே நூறு ஆண்டுகளுக்குப் பின் நமது ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம் சார்பாக மறுபதிப்பு செய்யப்பட்டு வெளிவர உள்ளது சிவபரம்பொருள் திருவருளே ஆகும்.

இந்நூல் மறுபதிப்புச் செய்திட இரு காரணங்கள் : 1) பழைமையான இந்நூல் கருத்துக்கள் சைவவுலகைச் சென்றடைய வேண்டும். 2) காலவெள்ளத்தால் இந்நூல் அழிந்து விடாமல் உயிர்பெற வேண்டும் என்பதும் ஆகும்.

இந்நூலுக்கு அருள்வாழ்த்துரைகள் வழங்கிய திருவாவடு துறை ஆதீனம் 24-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கும், திருப்பனந்தாள் காசிமடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். அணிந்துரை வழங்கிய மயிலாடுதுறை சிவபுரம் வேத சிவாகம பாடசாலை நிறுவனர் - முதல்வர் சிவஸ்ரீ A.V.சுவாமிநாத சிவாசாரியார் அவர்களுக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் மறுபதிப்பாகச் வெளிவர மனமுவந்து பொருள் உதவி நல்கிய கோயம்பத்தூர் சிவஸ்ரீ A.ஜெயராமன் குருக்கள் அவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி M.N.கல்யாணசுந்தர குருக்கள் அவர்களுக்கும், இந்நூலை அழகுற அமைத்து, வெளிவர உதவிபுரிந்த திருச்சிராப்பள்ளி ஸ்ரீகணநாத நாயனார் நூலக போற்றுநர் சிவத்திரு. மு.ஜயக்குமார் அவர்களுக்கு நமது உளமார்ந்த நன்றிகள்.

அன்பர்கள் இந்நூலை படித்துப் பயன்பெறவும், வைதிக சைவம் நிலைபெற்று விளங்க தொண்டாற்றவும் வேண்டுகிறோம்.

சிவார்ப்பணம்

ஸ்ரீஹரதத்தர் சரித்திரச் சுருக்கம்

ஆக்கியோர் : சிவஸ்ரீ தில்லை எஸ்.கார்த்திகேயசிவம்

சோழ வளநாட்டில் காவிரியாற்றின் வடகரையில் உள்ள திருத்தலம் கஞ்சனூர். இத்தலத்தில் விஷ்ணுவின் இருபத்தி ஐந்தாம் அவதாரமாக அவதரித்தவர் ஸ்ரீஹரதத்தாச்சாரியர்.

அத்தலத்தில் காஸ்யப கோத்திரத்தில் வந்த வாசுதேவர் என்ற வைணவ பிராமணர், மஹாவிஷ்ணு மீது மிகுந்த பக்தி கொண்டவர். அவர் மகாவிஷ்ணுவே தமக்கு புத்திரனாக பிறக்கவேண்டும் என்று தவம் செய்தார். பரமேஸ்வரன் ஆக்ஞைப்படி, திருமால் சுதர்ஸன அவதார சொருபமாக வாசுதேவருக்கு புத்திரராக அவதரித்தார். குழந்தைக்கு பெற்றோர்கள் "சுதர்ஸனன்" என்று பெயரிட்டார்கள்.

சுதர்ஸனன் வைணவ குலத்தில் பிறந்தாலும் இயற்கை யாகவே சிவபக்தி மிகுந்தவராக விளங்கினார். கஞ்சனூரில் உள்ள சிவாலயம் சென்று நாள்தோறும் விபூதி தரித்து ஸ்ரீ அக்னீஸ்வரப் பெருமானை வழிபடும் நியதி கொண்டவராக விளங்கினார்.

சுதர்ஸனனின் இச்செயல்கள் அவர்கள் பெற்றோர்களுக்கு கவலை அளித்தது. ஒருமுறை சுதர்ஸனர் இல்லத்தில் சிவக் கோலத்தில் இருப்பதைக் கண்ட, தந்தை வாசுதேவர் வெகுண்டெழுந்து தன் மனைவியைப் பார்த்து, இவன் குலத்துரோகி, நம் சமயத்திற்கு விரோதி, இவனுக்கு உணவு இடாதே என்று வீட்டை விட்டு வெளியே துரத்தினர்.

சுதர்ஸனர் நேராக கஞ்சனூர் சிவாலயம் சென்று, அங்கு ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சந்நிதியில் தியானத்தில் அமர்ந்தார். அப்பொழுது "ஹே மகாப்பிரபோ, இச்சிறியவன் தங்களை சரணடைந்தேன். என்னுடைய சரீரத்தை பெற்றெடுத்த தாய் தந்தையரை விட்டுவந்தேன், உலகத்திற்கு அம்மையப்பராகிய தாங்களே எம் பிதா மாதா" என்று மனமுருகி வேண்டினார்.

குழந்தையாகிய சுதர்ஸனின் வேண்டுதலுக்கு மனமிரங்கி இறைவன் ரிஷபாரூடராய்க் காட்சி அளித்து குழந்தையின் கண்களுக்கு தம்மை தரிசிக்கவல்ல சக்தியையும் கொடுத்தார்.

அப்பொழுது அக்குழந்தை நமஸ்கரித்து கண்ணீர் மல்கி நிற்க,

''குழந்தாய் உனக்கு சகல வேதங்களையும் சாஸ்திரங்களையும் அருள் செய்கிறோம். நீ உலகத்தில் உம் பிறவி நோக்கமாகிய சைவ ஸ்தாபனம் செய்து சிவஞானம் போதித்து சில காலம் கீர்த்தியோடு வாழ்ந்து வருவாய்'' என்று அருள் செய்தார்.

''மேலும் குழந்தாய் உம் உடல், பொருள், ஆவி மூன்றையும் எமக்கு தத்தம் செய்து கொடுப்பாய்'' என்று இறைவன் கேட்க, சுதர்ஸனனான சிவகுழந்தை உடனே தயங்காமல் தனது ஆவியையும், உடலையும், உடமையையும் தத்தம் செய்து கொடுத்தார்.

''மகனே! நீ ஹரனான எனக்கு உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்து கொடுத்ததால் உனக்கு ''ஹரதத்தன்'' என்ற தீக்ஷா நாமம் தந்தோம்'' என்று அருளிச் செய்து, தமது திருக்கரங்களால் விபூதியிட்டு, பஞ்சாக்ஷர உபதேசம் செய்து ஸ்படிக லிங்கம் அளித்து சிவபூஜா விதிமுறைகளை தாமே உபதேசித்து அருள் செய்தார்.

''ஹரதத்தர்'' என்றால் தன்னை ஹரனுக்கு தத்தம் செய்து கொடுத்தவர் என்று பொருள் ஆகும்.

ஸ்ரீ ஹரதத்தர் சிவக்கோலத்தோடு தம் தாயாரை காணச் சென்றார். அப்பொழுது தந்தை வாசுதேவர் இவரின் சிவக் கோலத்தைக் கண்டு, கோபாவேசமுற்றார். நீ சிவச்சின்னம் தரித்துக்கொண்டதால், கையில் சிவலிங்கம் ஏந்தியதால் வைணவ துரோகியாகிவிட்டாய் என்று ஏசினார்.

அப்பொழுது ஸ்ரீ ஹரதத்தர் தந்தையைப் பார்த்து, விபூதி, சிவலிங்க பூஜை செய்வது வைணவத் துரோகமா?

திருவீழிமிழலையில் மஹாவிஷ்ணுவே விபூதி ருத்திராக்ஷம் அணிந்து, சிவலிங்க பூஜை செய்து, தனது கண்ணைத் தாமரை மலராகக் கருதி அர்ச்சித்து வழிபட்டது உமக்கு தெரியாதோ? அவ்வாறாகையில் விஷ்ணு வைணவத் துரோகியா? என்றார்.

இதைக்கேட்ட தந்தை வாசுதேவர் திடுக்கிட்டார். இப்படி ஹரதத்தருக்கும் வாசுதேவருக்கும் வாக்குவாதம் வளர்ந்தது.

அந்நிலையில் தந்தையார் உள்ளிட்ட வைணவர்கள், சிறுவனே வாயால் வெறுமனே "சிவமே பரம்" என்றால் நாங்கள் ஏற்கமாட்டோம். பழுக்க காய்ச்சிய மழு முக்காலியில் அமர்ந்து கையை உயர்த்தி மூன்று முறை சத்தியம் கூறினால் நம்புவோம் என்றார்கள்.

ஸ்ரீ ஹரதத்தர் இதற்கு உடன்பட்டார். கஞ்சனூர் வரதராஜப் பெருமாள் சன்னதி முன் தீ வளர்க்கப்பட்டது. தீக்குழி உண்டாக்கி இரும்பு முக்காலி இட்டு தீயில் பழுக்க காய்ச்சினார்கள்.

ஸ்ரீ ஹரதத்தர் சிவசிந்தனை கொண்டவராக பெருமாள் சன்னிதி முன்பு வந்தார்.

"பெருமாளே, நீர் சக்கரம் பெறுவதற்காகக் கண்மலரிட்டுச் சிவனை வழிபட்டதாலும்,

இராமாவதாரத்தில் ராமேஸ்வரத்தில் லிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டதாலும்,

கிருஷ்ணாவதாரத்தில் உபமன்னிய முனிவரிடம் சிவதீக்ஷை பெற்று சிவபூஜை செய்ததாலும் நீரும் ஒரு சிவபக்தராவீர். ஆகவே உம்மை வணங்குகிறேன்.

நான்கு வேதங்களும், புராணங்களுக்கும் சிவமே பரம் பொருள் என்பது உடன்பாடானால் இந்த நெருப்புக்குழி பொய்கை போன்று குளிரட்டும்.

இந்த பழுக்க காய்ச்சிய மழு முக்காலி தாமரை மலர்போல் குளிரட்டும்" என்று பிரார்த்தனை செய்துகொண்டு,

தீக்குழியில் இறங்கி மழு முக்காலியில் அமர்ந்தார். இரண்டு கைகளையும் உயர்த்திச்,

"சிவனே பரம், சிவமே பரம்பொருள்"

என்று கூறிச், சிவபரத்துவ ஸ்லோகங்களையும், இருபத்திரண்டு காரணங்கள் அடங்கிய பஞ்சரத்ன ஸ்லோகங்களையும் பாடி அருளினார். தேவர்கள் கற்பக மலர் மாரி பொழிந்தார்கள். எங்கும் "ஹர ஹர மஹாதேவா" என்று முழக்கமிட்டார்கள்.

இவ்வாறு சிவபரத்துவத்தை நிலைநாட்டிய புண்ணியர் ஸ்ரீஹரதத்தாச்சாரியர்.

சுவாமிகள் அருள் செய்த நூல்கள்

1) சிவபரத்துவ ஸ்லோகங்கள் : இந்நூல் ஆறு ஸ்லோகங்களால் ஆனது. ஹரதத்தர் மழுமுக்காலியில் அமர்ந்து சிவனே பரம்பொருள் என்பதை நிலைநாட்டும் போது முதற்கண் இயற்றியது.

2) சுலோக பஞ்சகம் : இந்நூல் ஐந்து ஸ்லோகங்களால் ஆனது. எனவே "பஞ்சரத்ன ஸ்லோகம்" என்று அழைப்பார்கள். இந்நூலில் சிவமே பரம் என்பதற்கு 22 காரணங்களை அருளியுள்ளார். ஸ்ரீ ஹரதத்தர் செய்த இந்த வடமொழி நூலை, திருவாவடுதுறை ஆதின ஸ்ரீ மாதவ சிவஞான சுவாமிகள் தமிழில் மொழிபெயர்த்துப் பாடியுள்ளார்.

3) தச ஸ்லோகி : இந்நூல் சிவபெருமைகளை கூறும் பத்து ஸ்லோகங்களால் ஆனது.

4) ஹரிஹர தாரதம்மியம் : இந்நூல் 108 ஸ்லோகங்களால் ஆனது. ஹரிக்கும் ஹரனுக்கும் உள்ள தாரதம்மியத்தை எடுத்துக் கூறியுள்ளார் இந்நூலில்.

5) சுருதி சூக்த மாலை : ஸ்ரீ ஹரதத்தரால் வடமொழியில் செய்யப்பட்ட இந்நூலுக்கு சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் என்ற மறுபெயரும் உண்டு. இந்நூலுக்கு ஹரதத்தரின் சீடரான் சிவலிங்க பூபதியால் வடமொழியில் விளக்கவுரை செய்யப்பட்டிருக்கின்றது. திருவாவடுதுறை ஆதின மகாவித்வான் சபாபதி நாவலர் இந்நூலை தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

இவ்வாறு சிவமே பரம் என்று அருளி சைவசமய ஸ்தாபனஞ் செய்தருளிய ஸ்ரீ ஹரதத்தர் தைமாதம் சுக்ல பஞ்சமி அன்று திருக்கைலாயம் சென்று இறைவன் திருவடியை அடையும் பேறு பெற்றார்.

சிவமே பரம் என்று உயிர் மூச்சாக வாழ்ந்து அருள்புரிந்தவர் ஸ்ரீ ஹரதத்தர் பெருமான். அவர் திருவடிகளை நினைந்து வணங்கி சிவபுண்ணியம் பெறுவோம்.

சிவார்ப்பணம்

ஹரதத்தர் இயற்றிய சுலோக பஞ்சகம்

இந்த வடமொழி நூலைத் திருவாவடுதுறை ஆதீன முனிபுங்கவர்களில் ஒருவரான ஸ்ரீமாதவச் சிவஞான முனிவர் ஒரே ஆசிரியப்பாவாகத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அப்பாடல் வருமாறு :

உயர்கா யத்திரிக்கு உரிப்பொருள் ஆகலின்
தசரதன் மதலை தாபித்து ஏத்தலின்
கண்ணன் கயிலையில் நண்ணிநின்று இரப்பப்
புகழ்ச்சியின் அமைந்த மகப்பேறு உதவலின்
தனாது விழியுடன் ஓராயிரம் கமலப்
புதுமலர் கொண்டுஅரி பூசனை ஆற்றலின்
ஆங்கவர்க்கு இரங்கி ஆழிஈந்து அருள்தலின்
ஐங்கணைக் கிழவனை அழல்விருந்து ஆக்கலின்
அமைப்பரும் கடுவிடம் அமுதுசெய் திடுதலின்
தென்திசைத் தலைவனைச் செகுத்துஉயிர் பருகலின்
அவுணர் முப்புரம் அழியவில் வாங்கலின்
தக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலின்
தனஞ்செயன் தனக்குத் தன்படை வழங்கலின்
மானுட மகடூஉ ஆகிய காலை
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலின்
சூழ்கடல் வரைப்பின் ஆன்றோர் அனேகர்
அன்புமீ தூர அருச்சனை ஆற்றலின்
நான்கிரு செல்வமும் ஆங்கவர்க்கு அருள்தலின்
ஐயிரு பிறப்பினும் அரிஅருச் சித்தலின்
இருவரும் அன்னமும் ஏனமும் ஆகி
அடிமுடி தேட அழல்பிழம்பு ஆகலின்
பிறப்பிறப் பாதி உயிர்க்குணம் இன்மையின்
கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பின்
பொய்புகல் வியாதன் கைதம்பித்தலின்
முப்புரம் இறுப்புழி முகந்தப் புத்தேள்

மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலின்
அயன்சிர மாலை அளவில அணிதலின்
ஞானமும் வீடும் பேணிநர்க்கு உதவலின்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவுள்
உம்பர்கள் எவர்க்கும் உயர்ந்தோன்
என்பது தெளிக இயல்புணர்ந்தோரே.

பஞ்சரத்ன சுலோகங்கள் என்ற சுலோக பஞ்சகத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் வருமாறு :

1. *சிறந்த காயத்திரி மந்திரத்தின் பொருளாக விளங்குவது சிவமே ஆகலானும்,*
2. *இராமன் இராமேசுரத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டிருப்பதாலும்,*
3. *கண்ணன் கயிலையை அடைந்து மகப்பேறு வேண்டிச் சிவனை வழிபட, அச்சிவன் மகப்பேற்றை வழங்கியதாலும்,*
4. *திருமால் திருவீழிமிழலையில் தனது கண்ணோடு ஆயிரம் தாமரை மலரிட்டு சிவனை வழிபட்டதாலும்,*
5. *சிவபெருமான் அப்போது மனமிரங்கி திருமாலுக்குச் சக்கரம் வழங்கியதாலும்,*
6. *திருமாலின் மகனான மன்மதனை சிவபெருமான் நெற்றிக்கண் நெருப்பால் சுட்டெரித்ததாலும்,*
7. *பாற்கடலில் விடம் எழவே அதைக்கண்டு திருமால் முதலியோர் சிவனிடம் அடைக்கலம் புகுந்தபோது, சிவன் விடத்தை உண்டு திருமால் முதலியோரைக் காத்ததாலும்,*
8. *சிவன் எமனை உதைத்து அவனது உயிரைப்பறித்ததாலும்,*
9. *திருமாலின் வஞ்சனையால் பவுத்தரான அரக்கர்களின் முப்புரத்தை அழிக்கச் சிவன் மேருமலையை வில்லாக வளைத்ததாலும்,*
10. *திருமாலைத் தலைவனாக வைத்துத் தக்கன் செய்த யாகத்தைச் சிவன் அழித்ததாலும்,*

11. கண்ணனின் நண்பனான அருச்சுனனுக்குச் சிவன் பாசுபத அத்திரம் வழங்கியதாலும்,

12. திருமாலின் அவதாரமான நரசிம்மத்தின் வெறியாட்டத்தைச் சிவன் சரபப் பறவையாக வந்து அடக்கியதாலும்,

13. திருமால் மோகினி அவதாரம் எடுத்தபோது, சிவன் மோகினிக்குக் கணவனாகி, சாத்தனை மகனாக அளித்ததாலும்,

14. பூலோகத்தில் அளவற்ற முனிசிரேஷ்டர்கள் அன்பு செய்து சிவனை வழிபட்டதாலும்,

15. அந்த முனிசிரேஷ்டர்களுக்கு சிவபெருமான் அஷ்டமாசித்தி வழங்கியதாலும்,

16. திருமால், தான்எடுத்த பத்து அவதாரங்களிலும் சிவனை வழி பட்டிருப்பதாலும்,

17. திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய போது அவர்களுக்கு அடிமுடி காட்டாமல் சிவபெருமான் நெருப்புப் பிழம்பாய் எழுந்ததாலும்,

18. பிறப்பு, இறப்பு முதலிய உயிர்க்குணங்கள் சிவனுக்கு இல்லாமையாலும்,

19. கங்கையாறு பாயும் காசி நகரில் திருமாலே பரம் என்று பொய் கூறிய வியாதன் தூக்கிய கைகள் ஸ்தம்பித்துப் போனதாலும்,

20. சிவன் முப்புரத்தை எரித்தபோது திருமாலே இடபமாக வந்து தாங்கியதாலும்,

21. பிரமனின் அளவற்ற தலைகள் கோத்த மாலையைச் சிவன் அணிந்திருப்பதாலும்,

22. சிவஞானத்தையும் வீடுபேற்றையும் விரும்பி வழிபடுகிறவர் களுக்கு சிவபெருமான் அவற்றை வழங்கி வருவதாலும்,

பசுபதி என்ற பெயருடைய முழுமுதற்கடவுளே தேவர்கள் யாவர்க்கும் பரம்பொருள் என்று அறிக.

ஸ்ரீசபாபதி நாவலர் வரலாறு (சுருக்கம்)

ஆக்கியோர் : சிவஸ்ரீ தில்லை எஸ்.கார்த்திகேயசிவம்

இலங்கையின் வடபாகத்திலே யாழ்ப்பாணத்து வட கோவையில் சைவவேளாண் மரபில் கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்த திரு. சுயம்புநாதபிள்ளை எனும் சிவபக்தர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் தெய்வ யானை. அவர்களின் இல்லறத்தின் அருந்தவப்பயனாய் சாலிவாகன சகாப்தம் 1766 (1846) இல் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சபாபதி என்று பெற்றோர் நாமகரணஞ் சூட்டினர்.

அவர் தாய் தந்தையர் உரிய பருவத்திலே சபாபதிக்கு விதிப்படி வித்தியாரம்பஞ் செய்து வைத்தனர். அக்காலத்து வடகோவைப்பதியில் வடமொழி தென்மொழிக் கல்வியிற் சிறந்த பிரமஸ்ரீ ஜெகந்நாதையர்பால் ஆரம்பக்கல்வி பயின்ற சபாபதி பிறகு சமஸ்கிருதம், தமிழ் இரண்டிலும் பெரும்புலமை வாய்ந்த நீர்வேலி சிவசங்கரபண்டிதரிடம் வடமொழி, தென்மொழி இரண்டையும் கற்றுத்தேறினார். ஆங்கில பாசையும் சிலகாலம் கற்று அம்மொழியிலும் விற்பத்தியுடைய ராயினர். செந்தமிழ்ப் புலமை தலைமைபூணும் பெருநோக்கத் தோடு கலைபயின்று வரும் நாளில் குனம்நோய் இவரைப் பிடித்துக்கொண்டது. வைத்தியத்தினாலும் அது தீர்ந்திலது. உணவுதானும் ஏற்றுக் கொள்ளக்கூடாத அளவு நோய் அதிகரித்துத் துன்பத்தைக் கொடுத்தது. இந்நோயினால் வருந்தி வாணாள் வீணாள் ஆவதிலும் உயிர் விடுதல் நன்று. அதிலும் சிவ சந்நிதானத்தில் உபவாசமிருந்து உயிர் துறத்தல் மிகவும் நன்று என தீர்மானித்து உடனே நல்லூர் கந்தசுவாமி கோயிலையடைந்து முருகப்பெருமானை வணங்கி, 'புண்ணிய புராண முழுமுதல்வரான சண்முகநாதனே! சுப்பிரமணிய சுவாமீ! தமியேனைப் பற்றிய இந்நோய் தீர்ந்து அடிமை கொண்டருள வேண்டும்' என்று பிரார்த்தித்து, கந்தபுராண தோத்திரப்பாக்கள், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, கந்தர் கலிவெண்பா, திருப்புகழ் என்னும் திவ்விய பிரபந்தங் களைப் பாராயணஞ் செய்துகொண்டு அங்கு சிலகாலம் இருந்தார்.

இவ்வாறு ஒரு மண்டலத்துக்கு மேல் அரிய உபவாசம் அநுட்டித்து வரும்போது ஒருநாளிரவு சொப்பனத்தில் அர்ச்சகர் பாயாசங் கொடுத்தருளப் பெற்றுண்டு ஆனந்த பரவசராய்த் துதியெடுத்து,

''அந்தமி லொளியின்சீரா லறுமுகம் படைத்த பண்பால்
எந்தைகண் ணின்றும் வந்த வியற்கையாற் சத்தியாம்பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையாற் றனிவேற் பெம்மான்
கந்தனே யென்ன நின்னைக் கண்டுளக் கவலை நீத்தோம்''.

எனப் பலவாறு திருவருளின் திறத்தை வியந்து கந்தவேள் திருவடிப்பற்று மேன்மேலும் ஓங்கி வளர அப்பெருமான் இன்னருள் பழுத்த சந்நிதானத்தில் சிலபகல் தொண்டு செய்து வந்தார். நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம் இவர் செய்த பிரபந்தங்களில் ஒன்றாகும். அது சுப்பிரமணியக் கடவுள் திருவிளையாடலை விளக்குவது. குருநாதனாம் முருகப் பெருமான் இவரது உபாசனாமூர்த்தியாம்.

அருளுபதேசம் பெற்றமை

இவர் பின்னர் திருவாடுதுறையை அடைந்து அவ்வாதீனத்து பதினாறாவது மகாசந்நிதானமாய் விளங்கிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அருளுபதேசம் பெற்று அவர்கள் முன்னிலையில் 12 வருடகாலம் ஞானநூல் களையெல்லாம் மரபாற் கற்று வல்லாராய் இலக்கிய, இலக்கண, தர்க்க, வேதாந்த, சித்தாந்த சாகரமாய் அவ்வாதீன வித்துவசிகாமணியாய் விளங்கி மிக்க புகழும் தக்க வரிசையும் பெற்றார்.

நாவலர் பட்டம்

அவையோர் வியக்கச் சொல்லும் உரைவன்மையினையும், நிகழ்த்தும் சைவப்பிரசங்கப் பிரவாக மகிமையினையும், மாயாவாதி முதலிய குதர்க்கர்களும் பிறரும் நாவடங்கச் செய்யும் நியாயவாதச் சொற்போர் வென்றினையும் குறித்துச் சுப்பிரமணிய யோகீந்திரர் இவருக்கு 'நாவலர்' என்னும் பட்டத்தினை மனமகிழ்ந்து அளித்தார். ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் அதனை ஆசீர்வதித்தருளினார்கள்.

சபாபதி நாவலர் செய்த நூல்கள்

சிதம்பர சபாநாத புராணம்
சிவகர்ணாமிர்தம்.
சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்
பாரத தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம்.
யேசுமத சங்கற்ப நிராகரணம்.
இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு
வைதிக காவிய தூஷண மறுப்பு
ஞானசூடாமணி
ஞானாமிர்தம்.
திருச்சிற்றம்பல யமகவந்தாதி
திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி.
மாவையந்தாதி
சிதம்பர பாண்டிய நாயக மும்மணிக் கோவை
வடகோவைச் செல்வ விநாயகர் இரட்டை மணிமாலை
நல்லைச் சுப்பிரமணியக்கடவுள் பதிகம்
வதிரிநகர்த் தண்டபாணிக்கடவுள் பதிகம்
புறவார்பனங்காட்டூர்ப் புறவம்மை பதிகம்
சிவஞானயோகிகள் குருபூசைமகோற்சவம்
திராவிடப்பிரகாசிகை

மேற்கோள் நூல்கள்

ஸ்ரீருத்திரம், நாராயணோபநிடதம், கைவல்லியோபநிடதம், காத்யாயன முனிவரின் கிரகிய சூத்திரம், ஆதித்தியோபநிடதம், மைத்திராயணச்சுருதி, சாம்பமிருதி, கிரகபூசாவிதி, கற்பசூத்திரம், போதாயண சூத்திரம், சுவேதாச்சிவதரோபநிடதம், மநுஸ்மிருதி, ஈசுர பதச்சுருதி, சிவ பதச் சுருதி, ச்ருவஞ்ஞ சுருதி, காமரிபு பதச் சுருதி, இருக்குவேதம், சாமவேதம், அதர்வசிரசு, யசுர்வேதம், பாரதம், சுவேதாச்சுவதரச்சுருதி, பரதநூல்

உ

கணபதி துணை

கத்தியரூப

சதுர்வேததாற்பரிய சங்கிரகம்

தற்சிறப்புப் பாயிரம்

''மதியணிசடைமுடி வானவனளித்த
கதிதரு களிற்றின் கண்ணருளூறீஇச்
சற்குருநாதன் பொற்கழல் வணங்கி
வரம் பெறுகலையெலாம் ஒருங்குமுழுதுணர்ந்த
விரதத்தாரடி புனைந்தமேலோன்
அரதத்தாசா ரியசூளாமணி
சிவனேபரனெனத் தேறிய யாவரும்
வடமொழியதனிற் திடமுறவருளிய
முதிர்போதங்காட்டு முதனூலான
சதுர்வேததாற்பரிய சங்கிரகத்தினை
அம்முறை மொழிபெயர்த்து அரும்பொருள் தோன்றச்
செம்மைசேர் கடாவிடை சேர்கத்தியமாத்
திருந்தநுனித்து எணிச் செய்குவன்
அருந்தமிழ்நாவலோர் அறிதரற் பொருட்டே''.

சிவவணக்கம்

எவன் வணக்கத்தினுக்குரியன் எவன் குணங்களால் நிறைந்தோன்
எவன் வழிபாடியம்பு நாராயணம் என்னு உபநிடதம்
எவன் நம்முயிர்ப்பிரேரகன் மற்றெவன் வேள்விக் கெலாம்இறைவன்
அவனாகும் ஈசஉனைக் கதியிலியான் சரணடைந்தேன்.

வேதத்து மற்றதனுக்கு அவிரோத தந்திரத்தும் விமலவுன்னைப்
போதிக்கும் வாக்கியங்கள் எவற்றினையும் அறிந்தவற்றாற் போந்தமூட
வாதத்துக்கிடமாகாத் தாற்பரியத் தினைச்சுருக்கி வகுப்பானுற்ற
பேதைக்குப் பேதையாமெனக்கருளி மெய்ந்நெறியிற் பிரேரிஎந்தாய்.

நூல்

வேதமாவது மந்திரம் அருத்தவாதம் விதிவாக்கியம் என மூவகைப்பட்டு, பிறவாக்கியங்களைப் பற்றாது தானே பிரமாணமாகி, விமற்சரர்க்கன்றிப் பிறர்க்கறியப்படாத மெய்ப் பொருளினை யுடைத்தாய், ஈசுரனையே அறிவிப்பதாம்.

இனி ஈசுர சத்தம் யோகத்தாற் பிறகடவுளரையு முணர்த்து மேனும், யோகரூடியினாற் சிவபிரானையே யுணர்த்தலின், அஃதவர்க்கே யுரிய பெயராம். யோகத்தினும் ரூடி வலியுடைத்து என்பது மீமாஞ்சை வழக்கு எனவறிக.

இது பற்றியன்றே நிகண்டு நூலுடையார் சிவாதிநாமங்கள் போல இதனைச் சிவநாமமாகக் கொண்டோதுவார் ஆராயிற் றென்க. அற்றேல், மகேச்சரன் பரமேசுரனென வொரோவழிப் பிறிதினியைபு நீக்கி விசேடிப்பது எற்றிற்கெனின்;- மகத் பரம வென்னும் விசேடணங்கள் செஞ்ஞாயிறு என்றாற்போலச் சிவபிரானது இயற்கையாகிய வுயர்பினையே குறித்து, இயைபின்மை நீக்கு தன்மாத்திரையின் விசேடிக்க வந்தனவன்றிப் பிறிதினியைபு நீக்கி விசேடிக்க வந்தன வன்றென்க.

அற்றேல், அங்ஙனம் விசேடித்துப் பயப்பதின்றெனின்; அற்றன்று;பொருளின் கண் உயர்பியற்கையாக வுள்ளதேனும், விசேடணபதத்தான் விளங்குமென்பது சத்தநூலார் மதம் ஆகலின், மகத் பரம என்பனவற்றான் ஈசுரசத்தத்தினது இயற்கையான வுயர்பு, விளங்கலின், பயனுண்டு என்க.

இனிக் காணப்படும் இந்தப் பிரபஞ்சம் ஓர்ஈசுரனாலன்றி நிலையுதலுடைத்தன்று. அவ்வீசுரனும் ஏகனாதலன்றி அனேகனா தலும் பொருத்தமின்று. ஈசுரசத்த வாச்சியத்துவஞ் சிவபிராற்கு அன்றி ஏனைத்தேவர்க்கின்மையின், லோகவேதாதி கரண நியாயத்தினானே பிரபஞ்சம் அவரானே நிலையுதலுடைத்து என்றலே பொருத்தமுடைத்து என்க.

சாங்கியரிலொரு சாராரும் அவரை யனுவதிக்கும் பிறரும் பிரபஞ்சம் ஈசுரனையுடைத்தன்று என்றும், யோகநூலாரும்

அவரை யனுவதிக்கும் பிறரும் அஃதுஈசுரனையுடைத்து என்றுங் கூறுப.

இஃதென் சொல்லிய வாறோவெனின், பன்மதத்தரு முதல்வனதுண்மை யின்மைகளை ஈசுரசத்தங்கொண்டே விவகரிப் பவென அதன் வழக்கு மிகுதி உலகின்கட்காட்டி ஏதுவை விளக்கு முகத்தான், '**உலகிற்கு முதலாந்தன்மை சிவபிராற்கே பொருந்தும்** என்ற மேற்கோளை வலியுறுத்த வாறென்க.

இவ்வாற்றாற் றலைமையான அபரிச்சின்ன ஐசுவரிய முண்மை '**சிவபிரானுக்கே சித்தித்தலின் வணங்கப்படுந் தன்மை அவருக்கே யுரித்தாம்** என்க.

இதுபற்றியன்றே வேதங்கள் சிவபிரானுக்கே பெரும் பான்மையாக வணக்க வாக்கியங்கள் கூறியதூஉமென்க. அது சிவபிரானைக் குறித்துப் பசு நியோசனங் கூறிய "யாவனுக்கு வணக்கம் உரித்தாமோ அவன் பொருட்டு உன்னை நீ யோசிப்பேன்" என்னுஞ் சுருதியானும், சிவபெருமானைத் திப்பியமாகிய சிசுமாரவிருக்கத்தின் சிரசென்று கூறிய "எது வணங்கற்பாற்று அது சிரசாம்" என்னுஞ் சுருதியானுமறிக.

அஃதேல், சிவபிரானை யொழித் தொழிந்த ஏனைத் தேவர்க்கும் வேதத்தில் ஆண்டாண்டு வணக்கங்கூறியது என்னை யெனின்; **ஆற்றுநீர் கடலையடையுமாறு போல ஏனைத் தேவர் மாட்டுக் கூறப்பட்ட வணக்கங்கள் சிவபிரானையே சென்ற டைதலின், அங்ஙனம் கூறப் பட்டது என்க. இவ்விரண்டு சுருதியானுஞ் சிவபிரானே வணக்கத்துக்குரியர்** என்பது மந்த புத்தி யுடையார்க்கும் இனிது விளங்கும்.

அற்றேல், ஆண்டுப் பசுநியோசனஞ் சிவபிராற்குரியதென எடுத்தோதாமையானும், "எது வணங்கற்பாற்று அதுசிரசாம்" எனப் பொதுவாற்றாற் கூறியொழிதலானும், அவ்விரண்டு சுருதிகளானுங் கூறப்பட்ட வணக்கங்கள் சிவபிரானவென்றல் அமையாதாம்பிறவெனின்: அற்றன்று; ஆண்டுக்கூறப்பட்ட சூலகவம் என்னுங் கிரியை சிவபிரானுக்கே உரியதென மந்திரங்களெல்லாம் முறையிடுதலானும், ஏனைத் தேவ

ரெல்லாஞ் சிசுமார விருக்கத்தின் அவயவங்களாகக் கற்பித்தொழிக்கப் பட்டமையின் எஞ்சிநின்ற சிவபிரானே ஆண்டுச்சிரசாக வேண்டப் படுவர் என்பது பாரிசேட அளவை பற்றித் துணியப் படுதலானும், அஃதமைவுடைத்தென்க.

இது பற்றியன்றே பரதநூலார் இந்திரன், பிரமன் விட்டுணு என்னுந் தேவர்க்கு முறையே வச்சிரம், கமலம், சங்கமென்னும் முத்திரைகளானும், சிவபிரானுக்குச் சிரசில் அஞ்சலி முத்திரையானும், அவிநயங் கூறியதூ உமென்க.

இனிப் பிரமன் முதலிய தேவர் தம்மைக் குறித்துச் செய்யப்படும் வணக்கங்களைத் தமக்கென ஏன்றுகொள்ளக் கருதார்: ஏன்னை? சோரனால் வௌவிக் கொணரப்படினும், முடியணி அரசற்கே யுரியதாகலின், அதனை எவனும் ஏன்று கொள்ளக் கருதான்; கருதுமாயின், அப்பெற்றியான் அரசனால் ஒறுக்கப்படுதல் ஒருதலையாதல்போல அவருஞ் சிவபிரானால் ஒறுக்கப்படுதல் ஒருதலை யாகலின், அற்றேல், அவரேன்று கொள்ளுமாறு தானென்னையெனின்;- **அவ்வணக்கத்தைச் சிவார்ப்பணஞ்செய்தலே ஏன்று கொள்ளுமாறு** என்க.

அற்றேல், சிவபிரானுக்கே நேராக வணக்கங்கூறலமையும் அவர்மாட்டுக் கூறல்வேண்டாவெனின்;- அஃதொக்கு மன்னா யினும், உடம்பை உயிர் அதிட்டித்து நிற்றல்போல எல்லாப் பொருளையுஞ் சிவபிரான் அதிட்டித்து நிற்றலின், அவ்வியைபு பற்றி, அதிட்டிக்கப்படும் பொருள்கண்மாட்டும் அவர் வணக்கங் கூறப்பட்டதென்பது.

இக்கருத்துப்பற்றி யன்றே திருஉருத்திரத்திற் செடி களுக்கும் ஞமலிகளுக்கும் ஞமலிகளின் பதிகளுக்கும் வணக்கங் கூறியதூ உம், உலகத்திற் சிவபத்திக்கிழமை பற்றி நரராகிய சிவனடியர் வணங்கப்படுவதூஉமென்க.

இவ்வாற்றாற் சிவபிரானைக் குறித்துச் செய்யப்படும் வணக்கம் ஈசுரத்தன்மை குறிப்பதூஉம் அதனியைபு குறிப்பதூ உமென இருவகைத்து என்பதூஉம், அவற்றுள் **முன்னையது நேராகவும் பின்னையது அதிட்டிக்கப்படும் பொருள்**

வாயிலாகவுஞ் சிவபிரானை யடைப என்பதூஉம், போந்த வாறுணர்க.

இனிப் பின்னையதைச் சிரேட்டம் பற்றியது என்பாருமுளர். சிரேட்டம் இல்லாதனவற்றின் கண் அதிவியாத்திவருதலின், அஃது அதற்கு இலக்கணமாதல் யாங்ஙனம்? என மறுக்க. அல்லதூஉம், **பசுக்களாகிய தேவர்க்குப்பதியாந் தன்மைப் பற்றிச் சிவபிரானுக்குச் சிரேட்டப் பெயர் வழக்குச் சாமவேதத்திற் கிருச்சிர மந்திரத்துட் பொதுவாகவும் வேதத்தில்யாண்டுஞ் சிறப்பாகவுங் கூறப்படுதலின், அதுவும் அவர்க்கே** யன்றி ஏனைத் தேவர்க்குச் செல்லாமை யறிக.

சிவபிரானை ஏனைத் தேவரொடொப்ப வைத்து வணங் கலும், வாழ்த்தலும், வேள்விக்கண் விளித்தலும் நன்றாகா வென்க. புத்திரகாமேட்டிக்கண் அவிசமைப்பிற் சோமதேவதை யோடு உருத்திரன் ஒருங்கு விளிக்கப்பட்டமை வேதத்திற் கேட்கப்படுதலின் அது பொருந்தாது எனின்;- அறியாது கடாயினாய். ஆண்டுச் **சோமதேவதையோடு விளிக்கப்பட்ட உருத்திரன் சிவபிரானல்லர்** அக்கினியே யென்பது, ஆண்டைப் "பிராதரக்கினிம்" என்னுஞ் சூக்தத்திற் றானே சிவபிரானுக்கு விளி வேறாகக் காணப்படுத லினான், இனிது விளங்குதலினென்க.

அச்சூக்தத்திற் சிவபிரானுக்கு விளிவேறாகக் காணப் படுதல் எற்றாற் பெறுதும் எனின்;- அம்மந்திர சம்பந்தத் தகுதி யுடைத்தாய் நிகழ்த்தாநின்ற கிரியாபதத்தை யொழித்துச் சிவபிரானது விளிக்கண் வேறு கிரியாபதம் பிரயோகித் தமையாற் பெறுதும் என்பது. அல்லதூஉம், இவ்வாசங்கை யொழித்தற்கு ஏனைத் தேவரை விளித்த மந்திரங்கட்குஞ் சிவபிரானை விளித்த மந்திரத்திற்கு மிடையே, "உத" என்னும் பதந் தலைப் பெய்ததூஉங் காண்க.

அற்றேல் அஃது அங்ஙனமாக; ஆண்டு உருத்திரபதம் அக்கினியை உணர்த்தற்குப் பிரமாணம் என்னை யெனிற் கூறுதும். முன்னோர் காலத்திற் றேவர்கட்கும் அசுரர்கட்கும் பூசல் நிகழ்ந்தது. அப்போழ்து தேவர் தந் தனத்தைப் பாதுகாக்க

அக்கினி மாட்டு வைத்தனர். வைக்கப்பட்ட தனத்தை அக்கினி அபகரித்துக் கொண்டனன். அதுபற்றி அவர் அவனை வலிசெய்யலுற்றுழி, அவன் ரோதனஞ்செய்தனன். அதனான் அக்கினிக்கு உருத்திரப் பெயர் வழக்கு உண்டாயிற்று என்றறிக.

அஃதேல், மருத்துக்களுக்குஞ் சிவகணங்கட்கும் உருத்திரப் பெயர் வழங்குமாறு என்னையெனின்;- உருத்திரனினின்றுந் தோன்றினமையின் அவர்க்கும் அப்பெயர் வழக்குண்டாயிற்று என்க. **சிவபிரானுக்கோவெனின், உயிர்களுக்குச் ஸம்ஸார ரோகத்தை ஒழித்தற் காரணத்தால் அப்பெயருடைமை** யாயிற்று என்க.

யசுர்வேதத்தில் ஆருணம் என்னுஞ் சாகையில் யாகத்திற்கும் உருத்திரப்பெயர் கேட்கப்படுமெனின், ஒரு பொருட்பெயர் அதனோடு இயைபுடைப்பிறிது பொருட்கு மாகும் நெறியுண்மை யின், உருத்திரனோடு இயைபுடைத்தாய் யாகத்திற்கு அஃதாகு பெயராயிற்று என்க. தாபத்தை உயிர்க்கு விளைத்து அவை இரங்கச்செய்தலின், சுரத்திற்கும் அப்பெயர் வழக்குண்டு.

ரௌத்திரமோவெனின், அஃதும் அதனைப் பகுதியாக வுடைய தத்திதமென்க. அல்லதூஉம், வாயசம், பாகவதன் சாத்து வதன் என்றற் றொடக்கத்தனபோற்றத்திதபதப் பிரதிருபம் எனினும் அமையும்.

ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னுமாறும் பகம் எனப்படுதலின், இவை சிவபிரானுக்கே யுண்மையின் அவரே பகவான் எனப்படுவர்.

அற்றேல், இவை யாறுஞ் சிவபிரானுக்குள்ளன என்ப தற்குப் பிரமாண மென்னையெனின்; அவர்க்கு ஐசுவரிய முண்மைக்கு ஈசுர பதச்சுருதியும், வீரியமுண்மைக்கு உக்கிரபதச் சுருதியும், புகழுண்மைக்குச் சிவபதச்சுருதியும், திருவுண்மைக்கு இருக்குவேதமும், ஞானமுண்மைக்குச் சருவஞ்ஞ சுருதியும், வைராக்கியமுண்மைக்குக் காமாரிபு பதச்சுருதியும் பிரமாணமாம் என்க.

"திருவினாற்சிரேட்டர்" என்றும், **"திருவையெய்தும் பொருட்டுச் சிவபிரானது விசித்திரரூபமாகிய லிங்கந் தேவராற் பூசிக்கப்பட்டது"** என்றும் இருக்கு வேதங்கூறலின், ஈண்டுத் திருவெனப்பட்டது பொருட்டிரு அன்றென்க.

வாய்மை, பொறை, தைரியம், அதிட்டித்தல், ஆன்மபோதம், சிருட்டித்தல், ஆசையின்மை, தவம், புத்தி, ஈசுரத்துவம் என்னுந் தசகுணங்களும் தருமமுஞ் சிவபிரானுக்கே இயைவன.

இனி ஐசுவரியமுடையார், பெரும் புகழுடையார், வீரர், செல்வர், அரசர், சக்கிரவர்த்திகள் என்னுமிவரையும் இன்னோரன்ன இயல்புடைய பிறரையும் பகவப்பெயரான் வழங்கார். மெய்யுணர்நத அவாவறுத்தார்கட் சிவம் பிரகாசித்தல் உண்மையின், அவரைப் பகவப்பெயரான் வழங்குப.

அற்றேலஃதாக; பகவப்பெயர் சிவபிரானுக்குரியது என்பதற்கு எடுத்தோத் துண்டோவெனின்;- **அதர்வண வேதமுடையார் சிவ நாமங்களுட் பகவ நாமங் கூறுதலானும், சுவேதாச்சுவதரோப நிடதஞ் சிவபிரானையே "மகேசன்"** என்க் கூறுதலானும், எடுத் தோத்துண்டென்க. **நிகண்டுநூலுடையார் பூசிக்கப்படுங் குணம் உடையானையே பகவன்** என்ப.

இனி மனாதித்திரயங்களானுஞ் செயப்படும் பூசை சிவபிரா னுடையதே, திரு உருத்திரத்தில் "அவனைத்துதி" என்னும் மந்திரத்தான் விதிக்கப்பட்டமையின், அன்றியும், **உபநிடதங்க ளெல்லாஞ் சிவோபாசனை செயற்பாற்று** என முறையிடு கின்றன.

அவற்றுள், நாராயணோபநிடதம்பற்றிச் சிவோபாசனையை ஆராய்குதும். நாராயணோபநிடதத்திற் கூறிய உபாசனை **சிவோபாசனை** யென்பதூஉம், அதன்கட் கூறிய உபாசிக்கப்படும் பொருளினது உருவஞ் **சிவரூபம்** என்பதூஉம், மீமாஞ்சகர் கூறும் உபக்கிரம உபசங்காரநியாயம் பற்றித் துணியப்படும், அதன்கண் உபாசனையைக் கூறிய தொடங்கிய கண்ணுள்ள வாக்கியஞ் சிவரூபங் கூறி முடிந்த

உபசங்கார வாக்கியத்தோடு இயைந்து ஒரு பொருள் படுதலின் இங்ஙனந்துணியப்படவே, ஆண்டு நாராயணனுக்கு உபாசிக்கப் படுந்தன்மையும் உபாசனையாந் தன்மையும் ஓராற்றானும் பொருந்தாமையின், அவன் அவ் விரண்டுமல்லன் னென்பதூஉம், பாரிசேடத்தால் உபாசகன் என்பதூஉம், போதரும்.

அல்லதூஉம், ஆண்டு "நாராயணனுடைய இருதயாக் கினியின் சிகாமத்தியிற் பரமான்மாவுளன்" என்ற வாக்கியமே, வேறு பிரமாணம் வேண்டாது, அவன் உபாசகன் என்பதை வலியுறுத்தும். அது வலியுறுத்து மாறென்னையெனின்:- "நாராயணனுடைய இருதயத்திற் பரமான்மாவுளன்" என்று கூறினமையின், அவனைப் பரமான்மாவென்றல் பொருந் தாமையின் என்க. நாராயணன் தனது இருதயாக் கினிக்கு கண்ணிருந்து கொண்டு தானே தன்னை உபாசிப்பன் எனின்; அக்கூற்றியாவர்க்கு நகைவிளைக்கும் என்றொழிக.

அற்றேலஃதாக; நாராயணன் மேல் வைத்து உபாசனையை வருணித்தவாறு என்னையெனின்:- நாராயணனுடைய இருதய மும், அதன் கட்டகரமும், அதன்கட் பெரிய அக்கினியும், அதன் சிகாமத்தியிற் பரமான்மாவும் உண்டென்று அங்ஙனம் அருத்த வாதம் படக் கூறுமுகத்தானே, ஆசரிப்பவருக்குச் சிரத்தை போதர விசிட்ட புருடன் மேல்வைத்து, உபாசனை யை விதித்தவாறு என்க.

அற்றேல், ஆண்டு இருதயம் வேறோதப் பட்டதனான் அது நாராயணனுடையது என்றல் பொருந்தாதாம் பிறவெனின்;- அற்றன்று; நாராயணப் பிரகரணத்திற் கூறப்பட்ட இருதயம் பிறரைச்சார்தற்கு இயைபு இன்மையின் அஃதவனுடையது என்றல் பொருந்தும் என்க.

அற்றேலஃது அங்ஙனமாக; யதிப்பிரகரணத்திற் பூர்வஅநுவா கத்தான் விதிக்கப்பட்ட உபாசனை யாவர் கண்ணது எனின், ஆண்டையியைபு பற்றி ஆராய்வார்க்கு அதுவுஞ் சிவபிரான் கண்ணது என்பது தெற்றெனப் புலப்படுமென்க.

அஃதேல், ஆண்டு நாராயணனைப் "பரப்பிரமம்" என்றும், "பரஞ்சோதி" என்றும், "பரதத்துவம்" என்றுங் கூறுதன் மலைவாம் பிறவெனின்;- அற்றன்று; மாந்திரிகன் கருட பாவனையாற் கருடனோடு அத்துவிதமாய் நின்றவழி அக்கருடனென்றே கருதப்படுதல்போல நாராயணன் சிவபாவனையாற் சிவபிரானோடு அத்துவிதமாய் நின்றவழி அங்ஙனம் உபசரிக்கப் பட்டான் ஆகலின், மலைவுயாண் டையது என்க.

இவ்வொற்றுமை பற்றியன்றே அருச்சுனற்குக்கீதை நூல் செவியறிவுறுத்த கண்ணன் "யானே உலகெல்லாமாயினேன்" என்றதூஉம், சிவபிரானது விசுவரூபத்தைத் தான்காட்டியதூ உம், "ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுக" என்றதூஉம், அதனை உறுதியாகக் கொண்ட அருச்சுனன் அவன் கூறிய கருத்துநோக்கிச் சாங்காறுஞ் சிவபூசை செய்ததூஉம், கண்ணன் மேலிட்டபோதுகள் சிவபிரான் றிருமுடிமேற் கண்டதூஉம் என்க.

அற்றேல், ஆண்டுப் பரமான்மாவின் விபூதியில் வைத்துப் பிரமன் முதலிய தேவரோடு சிவபிரான்படிக்கப்படுதன் மலைவாம் பிறவெனின்;- அற்றன்று: ஆண்டுப் பரமான்மா வின் விபூதியில் வைத்துப் பிரமன் முதலிய தேவரோடு படிக்கப் பட்டமையின் சிவசத்தத்தால் உணர்த்தப்படுபவன் சங்காரத் தொழிலைச் செய்யும் அரன் என்பது தெள்ளிதிற் பெறப்படுத லினானும், ஆண்டுப் **பரமான்மா எனப்பட்டவர் அயன் அரி அரனென்னுந் திரிமூர்த்திகளையு நியமிக்குந் துரிய மூர்த்தியாகிய சிவபிரான்** ஆகலானும், சிருட்டித் தொழில் திதித் தொழில்களைச் செய்யும் அயன் அரிபோற் சங்காரத் தொழிலைச் செய்யும் அரனும் அவரது விபூதியே யாகலானும், மலைவுயாண்டைய தென்பது.

அற்றேல், ஆண்டுப் பரமான்மாவின் விபூதியில் நாராயண னைப் படியாதது என்னையெனின்;- கைவல்லியோப நிடதத்திற் கூறிய தகர வித்தையில் அவனும் விபூதியிற் படிக்கப் பட்டானா கலின், இவ்வுபநிடதத்திற் படியாது உய்த்துணர வைத்த தென்பது.

சிவபிரான் விச்சுவாதிகர்; நாராயணன் விசுவம். அவர் யாகத்துக்கு அதிபர்; அவன் யாகம். அவர் மூலப் பிரகிருதிக்கு நிமித்தகாரணர்; அவன்மூலப்பிரகிருதி. இங்ஙன மாகலின் இருவர்க்கும் வேற்றுமை பெரிதென்க.

அற்றேல், நாராயணனை "விசுவபதி" என்றதென்னை யெனின்;- அது துதிவாதமென்க. வேதத்தின் ஒரோவழிச் சிவபிரானை "விசுவம்" என்றது அவர் அதனை அதிட்டித் திருத்தல் பற்றியாகலின், அஃது உபசார மாத்திரையே யென்க.

இவ்வுண்மை வேதரகசியத்தை யுணர்ந்த பண்டிதர்க்கே விளங்கும். அது முற்றுணர்வெய்திய காத்தியாயன முனிவர் கிரகிய சூத்திரத்தில் எல்லாப் பொருளுஞ் சிவபிரானால் அதிட்டிக்கப் படுதல் பற்றி எல்லாக்கிரியையினும் அவர்க்கு வணக்கங் கூறியதனாலும், அதனை வலியுறுத்தற்பொருட்டு **"எல்லாப்பொருளும் உருத்திரன்"** என்னும் அநுவாகத்தை உதாகரித்தமையானும் விளங்கும். சிவபிரானை "விசுவம்" என்றதை உபசாரம் என்றறிய மாட்டாது, உண்மையென்று மயங்குவாரும் உளர்.

இங்ஙனம் உபாசனையும், உபாசகனும், உபாசிக்கப்படும் பொருளாகிய விரூபாக்கரும், அவருடைய நானாவித விபூதியும் நாராயணோப நிடதத்தாற் போந்தவாறு காண்க.

அற்றேல் அஃதாக; சிவபிரானைப் பிரதிபாதிக்கு மிது நாராயணோபநிடதம் என்றாய வாறென்னையெனின்;- புருட சூக்தம் நாராயணனை இருடியாக வுடைத்தாயவாறு போலச் சிவபிரானைப் பிரதிபாதிக்கும் இது எச்சரூபனாகிய நாராயண இருடியினான் உபதேசிக்கப்பட்டமையின், நாராயணோப நிடதம் என்றாயது என்க.

இவ்வுபநிடதஞ் "சிவபிரானிடத்தினின்றும் இரணிய கருப்பன் தேவர்யாவர்க்கு முதற்கட்டோன்றினன்" என்று கூறுகின்றது. இங்ஙனமாகவும், "நாராயணனிடத்தினின்றும் இரணியகருப்பன் றோன்றினன்" என்றும், "அவனிடத்தி னின்றுஞ் சிவபிரான் றோன்றினர்" என்றும் அறிவில்லார் பிதற்றுப. சிவயோகிகளுடைய இருதயமுதலிய ஐந்திடத்தி

னுஞ் சிவபிரானுக்குத் தோற்றர வுண்மையின் இரணிய கருப்பனுடைய இலாடமத்தியிற் சிவபிரான் தோன்றியருளினர் என்னும் வழக்காற் போதரும் இழுக்கென்னோ வென்பது.

திருஉருத்திரத்துட் திருவைந்தெழுத்து இருத்தல் போலச் சிவமந்திரங்கட்கு உயிராய்ச் சிவபிரானுக்கு மந்திரத் திருமேனி யாயுள்ள பஞ்சப்பிரமம் இதனகத்துண்மையின், இது மகோப நிடதம் எனவும் பெயர் பெறுமென்க.

இனிப் பஞ்சப்பிரம மந்திரத்துள் ஒன்றாகிய ஈசான மந்திரம் சிவபிரான் "வித்தை யெல்லாவற்றிற்கும் ஈசர்," என்றும், "பூதங்களெல்லாவற்றிற்கும் பதி" என்றும் "பிரமாவுக்கதிபதி" என்றும், "பிராமணருக்கதிபர்" என்றுங் கூறுகின்றது. இதன்கட் "பிரமாதிபதி" என்றதற்கு "வேதத்திற் கதிபதி" என்றுரைப்பாரு முளர். மேல் "வித்தை யெல்லாவற் றிற்கும் ஈசர்" என்றதனாற் றானே வேதமும் அதன் வழித் தோன்றிய பிறவித்தைகளும் அடங்குதலின், அது போலியுரை யென மறுக்க.

இருக்கு முதலிய வேதத்திரயங்களாகிய நிதிக்குக் கோசமாகிய மண்டலத்திலிருக்கும் ஆதித்தனை அதிட்டித் திருக்கும் புருட ராகிய சிவபிரானை ஆதித்தியோபநிடதம் "இவனே பூதாதிபதி" என்று சுட்டிக் கூறாநின்றது. "இவனே பூதாதிபதி" என்றன் மாத்திரையானே **ஆதித்தியஅந்தரியாமி சிவபிரான்** என்பது துணியப் படாதாம்பிறவெனின்; - அற்றன்று; "இரணியமயன்" என்றும், "இரணியவாகு" என்றும், "அம்பிகாபதி" என்றும், "உமாபதி" என்றும் அவ்வுபநிடதங் கூறுதலின், **ஆதித்தியாந் தரியாமி சிவபிரானே** என்பது தெற்றெனத் துணியப்படுமென்க,

மண்டலமும், அதிலாதித்தனும், அவற் கதிட்டாதாவாகிய, சிவபிரானும், அவர் விபூதியும், அவற்றினை யுணர்ந்தார் எய்தும் பயனுமென்னும் இவை ஆதித்தியோபநிடதத்தாற் போதரும் பொருள்களாம். இதனை உணர்ந்தார் காயத்திரி யையும் உணர்ந்தாரே யாவர்.

இனிக் காயத்திரிக்குரிய பொருள் சிவபிரானேயெனத் துணிதற்கு, ஆதித்தியோபநிடதமே அமையுஞ்சான்றாம்.

காயத்திரி மந்திரப்பொருள் சிவபிரானே சவிதாவன்று. என்னை? அதனகத் துள்ள பர்க்கசத்தஞ் சிவபிரானுக்கே யிடுகுறியாகலானும், அவரே அறிவைப் பிரேரிப்பவர் ஆகலானும் என்பது.

அப்பர்க்க சத்தம் அகாராந்த மன்று ஸகாராந்தமெனின்;- அதனகத்துள்ள யத்சத்தமுந் தத்சத்தமும் முறையே புல்லிங்கமும் நபுஞ்சகலிங்கமும் ஆகலிற் றம்முள் அந்வயமுறா. ஆகவே, அந்வயமாதற்குரிய அபின்னலிங்கத்தை அவாய் நிற்கும். அதனால், ஸகாராந்த மென்றல் பொருந்தாதுஎன மறுக்க.

வியாகரணநூலார் அஸுன் பிரத்தியயமாக கஞ்னுப் பிரத்திய யமாக ஈற்றில்வந்த பதங்களுக்கு ஆதியில் உதாத்தசுரம் வரு மென்றலின், மைத்திராயணச்சுருதியில் அகாராந்தமாகக் காணப்படுதலின், திரிந்தகாரகமாகிய கஞந்தமேயென்க.

இந்த மைத்திராயணச் சுருதி **"பர்க்கர் தியானிக்கற் பாலர்"** என்றும், **"பர்க்கப் பெயருடையான் உருத்திரன்"** என்றுங் கூறுமுகத்தானே, அது ஸகாராந்தம் என்றலை நிராகரித்தது. காயத்திரியின் முதற் பாதத்தைக் கடா விடைகளாற் கூறி, "இரண்டாம் பாதம் பர்க்கமயம்" என்ற தலைவகாரப் பிராமணமும் ஸகாராந்த மென்றற்கு இடந்தராது.

அற்றேல், "எந்தப் பர்க்கன் எமது புத்தியைப் பிரேரிக்கின்றான் அதனைத் தியானிக்கிறோம்" என்று லிங்க பேதம் போதர அந்வயித்தல் நுமக்குஞ் சாலாதெனின்;- காயத்திரிக்குரிய பொருளாகிய சிவபிரானது பெயராகிய பர்க்க சத்தம் அவரின் வேறாகாத ஒளிக்கும் உண்மையின், "அதனைத் தியானிக்கிறோம்" என்பது அந்தப் பர்க்கனோடு இயை புடைத்தாயவொளியைத் தியானிக்கின்றோமென்று பொருள் படுதலின், எமக்கது சாலாமை யாண்டையதென்க. இது சாம்பமிருதி நூற்றுணிபென்க.

"அதுவே யக்கரம்" என்றும், "அது சவிதாவினான் வரிக்கப் படும் பொருள்" என்றும், "அதனினின்றும் அறிவங்குரித்தது" என்றுஞ் சுவேதாச்சுவதரோபநிடதங் கூறுதலினானுங்

காயத்திரிக் குரிய பொருள் சிவபிரானே யென்பது தெற்றெனவுணர்க.

இக்காயத்திரி மந்திரம் பர்க்கராகிய சிவபிரானையே யுணர்த்துவதாயினும், சவிதாவென்னுஞ் சத்தமாத்திரை பற்றி ஆதித்தன் மேலுஞ் செல்லும். பிறாண்டும் ஒருகடவுளை யுணர்த்து மந்திரஞ் சத்தவொப்புமையாற் பிறகடவுண் மேலுஞ் செல்லு மென முனிவர் கூறுப: அது அருக்கனைத் தெய்வமாக வுடைய இருக்கு விசுவதேவ சத்த வொப்புமையாற் பிதிரர் மேலும், புஷ்ய சத்த வொப்புமையாற் பூடண தேவர் மேலுஞ் செல்லு மாற்றானுணர்க. பிறவு மன்ன.

இனி இவ்வாறன்றி, கிரகபூசாவிதியில் "சம்" என்று தொடங்கிய மந்திரத்தாற் சனி பூசையும், "உத் புத்திய சுவ" என்றதனாற் புதபூசையுங் கூறுதலுங்காண்க. "இருக்கு யசுர் சாமமென்னும் வேதமூன்றனையும் நன்குணர்ந்தபிரமன் அவற்றின் சாரமாகிய மூன்றுபாதத்தை யுடைத்தாய இக்காயத்திரியைக் கண்டான்" என்று மநுவாற் கூறப்பட்டது.

அரசற்குரிய இறைப் பொருளை அவன் வினைசெய்வார் குடிகளிடத்திற்கொண்டு அவன் மாட்டுச் செலுத்தல் போலச் சிவபிரானுக்குரிய அவிசை அக்கினி யாகத்திற்கொண்டு அவர் மாட்டுஅடைவிப்பன் என்பது, அருச்சுனன் கண்ணன் மாட்டுச் சென்றடைந்தமையால் இனிதுணரப்படும்.

"யாகங்களிற் செய்யப்படுஞ் சோமவிளியும் பசு நியோசன முஞ் சிவபெருமான் பொருட்டுச் செயற்பால" என்றும், பால் த்யிர் முதலிய அவிசும் அவருடையன என்றும், வேதங்கூறும்.

சோமமும் பசுவுங் கவ்வியமுஞ் சிவபிரானுடைய வாதல் பற்றியன்றே பசுவின் அவிசிற் றத்தமக்குரிய கூற்றை அவராணை யாற் றேவர் பெறுவாராயிற்றென்பது.

பசுவின் அவிசொழிந்தவற்றிற்குச் சிவபிரானது ஆணை பெறப்பட்டது இன்றாலெனின்;- தலைமைப் பொருளாகிய பசுவின் அவிசுக்கு அது பெறப்படவே, உபலக்கணத்தால், பசுவின்அவி சொழிந்தவற்றிற்கும் அதுதானே போதருமென்க.

பசுபந்தனக்கிரியை மாத்திரையே சிவபிரானது ஆணை யாற் செயற்பாற்றென்பதும் பொருந்தாது, **"எல்லாக் கிரியையுஞ் சிவபிரானது ஆணையாற் செயற்பால"** எனச் சாம வேதமுடையார் கூறுதலின்.

"அக்கினியிற் செயப்படுஞ் சோமாகுதியுஞ் சிவபிரானுக்கே யுரியது" என யசுர்வேதமுடையார் கூறுப.

"யாகங்களில் எஞ்சி நின்ற பொருள்களும் யாகபதியாகிய சிவபிரானுடையவே" என்று யசுர்வேதங் கூறும்.

"கவ்வியத்தானுஞ், சோமஅவிசானும் பக்குவசரு வானுஞ் செயப்படும் இருபத்தொரு யாகங்களுக்குஞ் சிவபிரானே அரசர்" எனவேதங்கூறும். அற்றேல் "துவமக்கினே" என்னு மந்திரமும் அதனையடுத்த மந்திரமும், "உருத்திரனை யுடைத்து அக்கினி" என்று கூறுதலின் உடைப் பொருளாகிய சிவபிரானுக்கு அரசு பொருந்தாதாம் பிறவெனின்; - அற்றன்று; அரசனையுடைத்திப் பூமி யென்ற வழிச் சேதனனாகிய அரசனுடைப் பொருளாதலும், அசேதனமாகிய பூமியுடையா னாதலுஞ் செல்லாமையின் செல்லும் பொருட்டுப் பூமியை யுடையான் அரசன் என மாறிக் கொள்ளப்படுமன்றே; அதுபோல "உருத்திரனையுடைத்து அக்கினி" என்றதூஉங் கோடற் பாற்றாகலின், பொருந்தாமை யாண்டையதென்க. ரௌத்திரபசு வியத்தியில் இம்மந்திரங்கள் சிவபிரானையே யுணர்த்தலினானும் யாகத்திறைமை அவர்க்கே யுரித்தென்க.

அற்றேல், அக்கினியை யுடையான் உருத்திரனெனச் செவ்வனே கூறாது "உருத்திரனையுடைத்து அக்கினி" எனப் பிறழக்கூறியது என்னையெனின்;-ஒருபயனோக்கி அங்ஙனங் கூறிற்றென்க. என்னையோ பயனெனின்:- உருத்திரனைப் பற்றியே அக்கினிசிறந்ததெனப் பொருட்பேறு எய்துவித்தலே பயன்என்க. தந்தையையுடைய மைந்தன், ஆண்டானை யுடைய அடிமை, ஆசிரியனையுடைய மாணவகன் என்றற் றொடக்கத் தனவாகப் பிறாண்டும் அங்ஙனம் வருமாறறிக.

சிவபிரானுக்கு யாகபதித்துவம், உருத்திரசூக்த மந்திரத் தொகுதிக்குச் சிரோரத்தினம்போல அணிசெய்வதாய்ச் சிவநாம வலியுடைத்தாய யசுர்வேதத்தானன்றி, ''மேதபதி'' என இருக்கு வேதத்தானுங் கூறப்படுமென்க. **''நிலையற்ற தேகம் விழுதற்கு முன்னர்ச் சிவபூசை செய்தற் பாற்று''** என்ற சிவதரும வசனத்திற்கு மூலமாயதூஉம், இந்த ''ஆவோ'' என்னும் மந்திரமே யெனவறிக.

அரசன் கோபமிலனாய் இன்முகமுடையனாயினும் அவன் மாட்டு அச்சங் குடிகளுக்கு நிகழுதல் இயற்கையே. அது போலச் சிவபிரான் இன்னருண் மூர்த்தியாயினும், அனேக சூரியர் ஒரோவழித் தலைப்பட்டு விளங்கியாங்குத் தேசோமய ராய் விளங்குதலின், திரு உருத்திரத்துட் **''பீமன்''** எனப் படுகின்றார். இன்னும் வேதஞ் சிவபிரானை **''அஞ்சத்தக்க வச்சிரம்''** என்றுங்கூறும். இங்ஙனஞ் சிவபிரான் மாட்டு அச்சகாரணத்துவம் உண்மையினன்றே, வாயு, பானு, அங்கி, இந்திரன், இயமன் முதலிய தேவர் தத்தந் தொழில்களை அஞ்சிவகித்துய்க்கின்றா ரென்க. இப்பயவேதுவைப் பிரம இலக்கணம் என்ப.

''சிவபிரானுக்கு அகோரத்திருமேனி சிவத்திருமேனியென இரண்டுண்டு'' என்று வேதங் கூறுகின்றது. அவற்றுள், முன்னையது தம்மை வழிபடும் அன்பர்களுடைய ஸம்ஸார ரோக நீங்கச் சிகிற்சை செய்வது; பின்னையது அருணோக்கால் அவர்க்குப் பசுத்துவத்தைக் கெடுத்துச் சிவத்துவாபி வியத்தியை விளைப்பது. சத்திர மிட்டறுத்தன் முதலிய கொடுந்தொழில்கள் வைத்தியன் மாட்டுளவேனும், வியாதியாளர் அவனையே சரண் புகுவர். அதுபோலச் ஸம்ஸார ரோகத்தினால் வருந்துமுயிர்கள் அதனிவிர்த்திப் பொருட்டுச் சிவபிரானது கோரத் திருமேனியை வணங்கி, திரு உருத்திர மந்திரங்களாற் சாந்திவேண்டுப.

சிவத்துவாபிவியத்திப் பொருட்டுச் சிவத்திருமேனியைச் சமகமந்திரங்களால் உவப்பிப்ப. இவ்விரண்டு மந்திரங்களுஞ் சிவபிரானது ஓமத்தின் பொருட்டும் பிரயோகிக்கப்படும். இச்சமக மந்திரங்கள் அரி அயன் இந்திரன் முதலியாரை

அன்னாதிகளுடன் சேர்த்து, ஈயப்படும் பொருள்களாகக் கூறுகின்றன. சிவபிரான் அவற்றை ஈயும் தாதா வாகலின், அவரை அங்ஙனங் கூறிற்றில.

பெரியோர் சந்நிதானத்திற் சிறியோரை ஒப்பச் சம்மானி யாமை உலகிற் கண்டாமன்றே; அதுபோலச் சிவபிரானது சன்னிதானத்திற் றேவரை ஒப்பச் சம்மானித்தன் முறையன்மை நோக்கி, யாகத்தின்கட் சிவபிரானைக்குறித்துச் செய்யுங் கிரியாந்தத்திற் பரிசேசனஞ் செய்து, வேறுபாடு தோற்றுவிப்ப. இஃதறிய மாட்டாது. அஃதிழிபு பற்றிய செயலென்று கூறும் அறிவிலார் என்கடவரென்க.

ஆன்மாக்களெல்லாம் பரதந்திரம் உடைமையாற் பசுக்க ளெனப் படும். **சிவபிரான் சுதந்திரமுடைமையால் அப்பசுக் களுக்குப் பதியெனப் படுவர்.** சுவேதாச்சுவதரோபநிடத முதலியன ஆன்மாக்களுக்கு அனீசத்துவமுஞ் சிவபிரானுக்கு ஈசத்துவமுங் கூறுதலின், அவற்றிற்கும் , அவருக்கும், அவ்விரு தன்மையும் இயற்கையே யென்க.

அற்றேல், "சிவபிரான் பசுபதித்துவத்தைத் தேவர்கட் பெற்றனர்" என்று வேதங்கூறியது மாறாம் பிறவெனின்;- அற்றன்று: இயல்பாக அதனையுடைய சிவபிரான் வேண்டிப் பெற்றாரென்றன் முழுவிரோதமாகலின், அஃது அருத்தவாத மென்க. அல்லதூஉம், அதனை வாய்மையெனக் கொள்ளின், தக்கன் வேள்வி சிதைத்தன் முதலிய அற்புதச் செயல்களைக் கூறும் வேத வாக்கியங்கள் போலியாய் முடியும். அதனானும் அஃது அருத்தவாதமேயென்பது.

"சிவபெருமானுக்கு அழிவில்லாத அனேக திருமேனி களுண்டு" என்று இருக்குவேதங் கூறுகின்றது. **"சிவபிரானை வழிபடும் அடியார்கள் அன்னத்தைப் புசிப்பர்"** என்று அதுவே கூறுகின்றது. அஃதங்ஙனங் கூறு முகத்தானே, **"நாடோறும் உணற்குமுன்னர்ச் சிவபூசை செயற்பாற்று"** என்னும் விதிக்கு மூலமாதலறிக.

சிவபுத்திரர்களாகிய மருத்துக்களைப் "பரதசூனுக்கள்" என்று வேதங் கூறியது, அவருக்குத் திருநடனத்தொழிலுண்மை

பற்றி யென்க. **பாரத்தை வகித்தல் பற்றிப் பரதன் எனப்படுகின்றார்** எனின்;- விசேடமாகிய திருநடனத் தொழில் அவர்க்குளதா யிருக்க, அது பற்றிக்கூறாது, அங்ஙனம் கூறுதல் எற்றிற்கென்று கடாவி மறுக்க.

இருக்குவேதத்திற் சிவபிரானை **"வீரன்"** என்றது, காமன், இயமன், திரிபுரத்தர், தக்கன் முதலியோரைப் பங்கப் படுத்தினமை பற்றியென்க.

ஆயிரஞ் சாகையுடைய சாம வேதத்தில் **"ஆன்மாக்கள் எல்லாவற்றிற்கும் அதிபதி சிவபிரான்"** என அவர் மகிமை கூறப்பட்டது. அதனகத்துள்ள தேவ விரதமுதலிய மந்திரங்களிற் சிவகணநாதர் மகிமை கூறப்பட்டது.

குணங்கள் எல்லாவற்றானும் பிதாவாகிய சிவபிரானோடு சமத்துவமுடைய விநாயகக்கடவுள் சுப்பிரமணியக்கடவுள் என்னுந் திருக்குமாரர் இருவருஞ் சாமவேதத்தாற் றுதிக்கப்படு கின்றனர்.

அதர்வசிரசு **"பிரமன் முதலிய பொருள்கள் எல்லா வற்றையுங் கைவிட்டு, சிவத்துவத்தைச் செய்தருளுஞ் சிவபிரானே புருடர்களால் வீடுபேற்றின் பொருட்டுத் தியானிக்கற்பாலர்; வீடுபேற்றிற்கு ஏதுவாகும் வார்த்தை யிதுவே பிறிதில்லை"** என்று கூறிமுற்றிற்று.

யசுர் வேதமுடையார் சிவபிரானோடுடன் றோன்றுதல் பற்றி, அருட்சத்தியாராகிய சிவபிராட்டியாரை அவர்க்குத் "தங்கை" என்று கூறுப. அதர்வண வேதமுடையார் "பிரமன் முதலியோரை நீக்கி, **சிவபிராட்டியாரோடு சிவபிரான் றியானிக்கற் பாலர்"** என்று கூறுப.

வேதங்களெல்லாம் **"ஏகனாகிய சிவபிரானே பதிப் பொருள்"** என்று கூறினும், யசுர் வேதமுடையார் அவரை அவர் தாதான்மிய சத்தியாரோடு இருபொருளாக விவகரிப்ப. அச்சிவபிராட்டி யாருடைய வாக்குமனத்துக்கு அதீதமான பிரபாவம் அனைத்தையும் புகலப் பிரமனும் வல்லுநன் அல்லன்.

ஒரு திருமுகமும், மூன்று திருக்கண்ணும், நான்குதிருத் தோளும், வெண்ணிறமும் பொருந்திய சிவபிரானுடைய

அழிவற்ற திருமேனி ஒன்றேனும் உபாசிப்பவர் வேறுபாடு பற்றிப் பலவாய் விளங்கும். "கிராதவடிவரும், பினாகத்தைத் தரித்த வரும், தோலுடையருமாகிய சிவபிரானை, அவருடைய தருமபத்தினியாராகிய சிவபிராட்டியாரோடு பர்வ காலத்திற் செயப்படுஞ் சாகமேதம் என்னுங் கிரியையிற் புண்ணிய அவிசுகளால் அநந்நிய பாவனையை யுடைய பத்தர் பூசிக்க" என்று கற்பசூத்திரத்திற் கூறப்பட்டது.

"சகத்தின் உற்பத்தியின் பொருட்டு வீரியமழையைப் பெய்வதூஉம், அணித்தாகிய மருங்கிற் பத்தினியாராகிய சிவபிராட்டியாரையும் நடுவிற் சுப்பிரமணியக் கடவுளையும் உடையதூஉம், சராமரணரகிதமானதூஉமாகிய விக்கிரகத்தை யுடைய சிவபிரானையும், அவருடைய துவாரபாலகர் களையும், அவர் பத்தினியாரையும், தேவசேனையாரோடு தேவசேனரையும், கேத்திரபாலரையும் பூசிக்கின்றனர்" என்று யசுர் வேதத்திற் கூறப்பட்டது.

"விரூபாக்கராகிய சிவபிரானைச் சிவபிராட்டி யாரோடும், திருக்குமாரர்கள் இருவரோடும், கணங் களோடும், பாரிடரோடும் அட்டமிப் பிரதோடத்திற் பூசிப்பவர், தம்பாவத்தினீங்கி, மிருத்துவையுங் கடப்பர்" என்று போதாயனத்திற் கூறப்பட்டது.

தேவர்களுடைய மந்திரங்கள் சில; அவை அவர்களுடைய வரையறைப்பட்ட பிரபாவங்களையே கூறும். சிவபிரானு டைய திருநாமங்களையுங் குணங்களையும் வருணிக்கு மந்திரங்கள் வரையிறந்தன. திருஉருத்திரத்திற் கூறப்பட்ட சிவபிரானுடைய திருநாமங்களும், திருமேனிகளும், குணங் களுமன்ன.

இனி வேதநூல் சுயம்புவானாலு மாகுக; சிவபிரானால் அருளிச் செய்யப்பட்டதானாலுமாகுக; வேதவாக்கிய முழுதும் பிரமாணமே. வேதத்தின் வேறாயநூல்கள், அதனோடு விரோதி யாத வழி, ஆக்கியோர் தாரதம்மியத்துக்கு ஏற்பப் பிரமாண மாம்.

வேதம்போல்திவ்விய சிவாகமமும் பிரமாணமாம். அச்சிவாகமம், சிவத்தியானத்துக்கு உபயோகமாயுள்ள பதி பசு பாசமூன்றனையும் விளக்குவதாய், சிவபிரானுக்குத் திருமுக முதற் றிருவடி ஈறாயுள்ள அங்கங்களால் இருக்கும்.

யாகவிதி கற்பசூத்திரத்தாற் பெறப்படுதல் போலத் தியாதாவும், தியானமும், தியெயமுமாகிய மூன்றுஞ் சிவாகமத் தாற் பெறப்படும்.

கிரகியசூத்திரத்து உபநயனவிதியிற் கூறப்பட்ட "அத்துவ நாம்" என்னுமந்திரம் அத்துவாவையும், அத்துவ பதியையும், அத்துவாக்களின் தாரதம்மியத்தையும், சிரேட்டாத்துவா எனப்படும், மந்திராத்துவாவின் முடிபாயுள்ள சிவத்தையுங் கூறுதலின், சிவாகமத்திற் கூறப்படும் அத்துவாக்கள், வேதத்தினுங் காண்க.

இருடிகளாற் செய்யப்பட்ட கற்ப சூத்திரமுதலியன பிரமாணமாகுமாயின், பெரிய விருடியாகிய சிவபிரானருளிச் செய்த சிவாகமம் பிரமாணமாமெனக் கூறல் வேண்டுமோ வென்க. தவவலியினான் வேத சமூகத்தினின்று ஒவ்வோர் மந்திரத்தை யுணரப் பெற்றானையன்றே இருடி யென்பவாக லின், இயல் பாகவே அம்மந்திரங்கள் அனைத்தையும் உணராநிற்குஞ் சிவபிரானைப் பெரிய இருடி யென்றற்கு ஆசங்கை என்னுமின் றென்க.

சாங்கியர் பாச பசு பதியென்னும் மூன்றனையு முறையே பிரதானம், புருடன், ஈசனெனப் பெயரிட்டு வழங்குப. அது சிவாகமத்திற்கும் உடம்பாடேயென்க.

கிரகிய சூத்திரகாரர் சிவபூசை கூறினார் இல்லையா லெனின்;- வேதத்திற் பெறப்பட்டும், புராணங்களிற் பிரசித்தமாயும், போதாயன முனிவரால் விஸ்தரிக்கப்பட்டும் இருத்தலின்,அதனை முற்றுணர்ந்த கிரகிய சூத்திரகாரர் கூறாதொழிந்தார். அது மட்டோ, அவர் முக்கியமாகிய யஞ்ஞோபவீதத்தையுங் கூறா தொழிந்தார். கூறாததுகொண்டு சிவபூசைக்குக் குறைவென்னை? வேதங்களுக்கு உபவிருங் கணங்களாகிய புராணங்களிற் சிவபூசை ஆண்டாண்டு

முழங்கப்படுகின்றது. அவ்வுபவிருங்கண வாயிலால் வேதத்தை மூலமாகவுடைய மிருதிகள் கூறாமைபற்றிச் சிவபூசை குறையுறாது என்க.

அல்லதூஉம், வேதப்பொருளை நிச்சயித்தற்குப் புராணம் அங்கமாம். அப்புராணங்களால் நிச்சயிக்கப்பட்ட வேதப் பொருளே மிருதிகளாம். ஆகவே, வேதம்போலப் புராண வசனம் பலமுடையன; அவற்றின் முன் மிருதிகள் வலியுடைய வாகா.

அல்லதூஉம், அனுபலத்திக்கு விடையமாகுஞ் சுருதியை மூலமாகவுடைமையினானும், அவை பிரபல பிரமாணமாகா. ஆகவே, பிரத்தியக்கவேதத்தினான் விதிக்கப்பட்ட யாகம் மிருதியின் பார்வையை வேண்டாதவாறுபோலச் சிவபூசையும் அவற்றின் பார்வையை வேண்டாது என்க.

இனிப் "பூர்வான்னத்திற் செயற்பாலனவாகிய நியமங் களை முற்றி, நியதசித்தனாய்த் தேவபூசையைச் செய்க" என மனுவாற் கூறப்பட்டமையானும், சிவபிரான் றேவருள் வைத்து மகாதேவர் எனப்படுதலானும்,மிருதியினுஞ் சிவபூசை கூறப்பட்டதென்றே கோடும், அற்றேல், சிவபிரானுக்கு மகாதேவப் பெயருண்மைக்குப் பிரமாணமென்னையெனின்;- அதர்வசிரசே பிரமாணமென்க.

அன்றியும், போதாயன சூத்திரத்திற் சிவபிராட்டியா ரோடும் இடபதேவரோடுஞ் சிவபிரானுக்கு ஈசான பலிகூறிப் பூசை விதித்ததூஉங் காண்க. புத்திப்பொருட்டுச் செயப்படுவதூ உம், முத்திப்பொருட்டுச் செயப்படுவதூஉமெனச் சிவபூசை இரு வகைப்படும். வேள்வியும் அங்ஙனம் இருவகைப்படும்.

சிவபிரான் றேவருட் பிராமண ராகலின், அவர்க்கு நிவேதித்த தனைப் புசிக்கலாகாது என முனிவர் விலக்குப. அற்றாகலினன்றே, "பிராமணர் உச்சிட்டம அனைத்தையு நிலத்திற் புதைக்க அல்லது சலத்தி லெறிக" என்று கற்பசூத்திரத்திற் கூறியதூஉமென வுணர்க. பிராமணராகிய சிவபிரானையே வழிபடுதல் பிராமணர்க்குத் தகுதியாம். ஏனைக் கீழ்வருணத்தராகிய தேவரை வழிபடுதல் பிராம

ணர்க்குத் தகுதியன்று. அற்றேல், சிவபிரான் றேவருட் பிராமணர் என்றற்குப் பிரமாணம் என்னை யெனின்:- சாம வேதத்திலுள்ள பிரமத மந்திரமே பிரமாணமென்க.

முனிவர் உயர்புடையதனையும் இழிபுடையதனையும் ஒப்ப விலக்குப: தீக்கித வன்னத்தையும் பதித வன்னத்தையும் விலக்கினமையானும், "சண்டாளன், சண்டிலன், மசான பாலகன், கள்விற்போன், பசு, பிராமணன், அக்கினி, தீக்கையுடையான், பெண்களென்னும் இவரைப் பரிசிக்கற்க" என்றமையானும், "பரிசிக்கிற் பிராயச்சித்தஞ் செய்து கொள்க" என்றமையானும், அக்கினிபோலுந் தீக்கித வன்னத்தை விலக்கியவர்தாமே, "இராசபரிக்கிரகம் என்னுங் கிரியைசெய்தபின்னர் அதனைப் புகிக்க" என்றமையானும், சங்கத்தின் அத்தியைப் பாவனமென்று மனுட அத்தியை அபாவனமென்றுங் கூறினமையானும், அதற்குக் காரணங் கூறப்படாதென்க. சிவபிரானை யொழித் தொழிந்த தேவர்களுக்கு நிவேதிக்கப்படும் அன்னம் அப்பிராமணருடைய பசிநிவிர்த்திப் பொருட்டு உபயோகப்படுக.

வைசுவதேவம் என்னுங் கிரியையில் அத்தேவர் சேடத்தால் அக்கினி முதலிய தேவர்க்குப் பலியிடலாகாது. அற்றேல், தேவர்களுக்கு நிவேதியாத அன்னத்தால் வைசுவதேவ பலியிட்டு, அவர்க்கு நிவேதித்த அன்னத்தைப் புசிக்கலாமெனக் கொள்ளா மோவெனின்;- கொள்ளாம், என்னை? "அசனத்துக்குரிய அன்னக் கூற்றினாற்றானே பலியிட்டுண்க" என விதிக்கப்பட்டமையின்.

முன்னொருகாலத்திற் "சிவபிரான் பிரமக்கொலைக்காகப் பலியேற்றனர்" என்பதை யுணரப் பெறுவார்க்கு, அது திருவிளையாடல் மாத்திரையே யென்பது இனிது விளங்கும். சிவபிரான் பிரமன்றலையைப் பறித்தமையானன்றே அவன் தீர்காயுளுடையனாய்ச் சீவிக்கின்றான் என்க.

அது திருவிளையாட்டன்று பிராயச் சித்தமெனின்;- நாபிமுதற் சானுபரியந்தஞ் சாணவத்திரந் தரித்தல், கையிற் கபாலதுண்டந் தரித்தல், கொடி தண்டம் பிணத்தலை தரித்தல், ஏழுவீட்டிற் பலியேற்றலென விதிக்கப்பட்ட பிராயச்சித்த

அனுட்டானம் அவர்கட் காணப்படாமையான், அது பொருந்தா தென மறுக்க.

அல்லாதூஉம், காலபைரவர் செய்த பிரமகத்திக்குச் சிவபிரான் பிராயச்சித்தஞ் செய்துகோடல் செல்லாது என்க. செல்லுமேல், கற்பங்கள் தோறும் அவர்செய்யும் பிரமகத்தி விட்டுணுகத்தி முதலியவற்றிற்குச் சிவபிரான் பிராயச்சித்தஞ் செய்துகோடல் வேண்டும்; அவ்வாறு செல்லாமையின், அது திருவிளையாடல் மாத்திரையே யென்பது.

பரமேசராகிய சிவபிரான் றேவர்கட் பசுபதித்துவம் பெற்றுக் கொண்டருளியதனையும், அவர் பயிக்கம் புகுந்தருளி யதனையும் அறிந்துரைக்கப் பிருகஸ்பதியும் வல்லானென்க.

இனிச் "சிவபிரான் பிரமவிட்டுணுக்களாயினர்" என்றும், "பிறவெல்லாமாயினர்" என்றும் அறிவிலார் அபேதபாவனை பேணுதற்கேது, பிறிதோராற்றாற் பெறப்படாமையின், அத் தேவரடைந்த இழிவை மறைத்தல் ஒன்றோ மோகமடைதல் ஒன்றோ இரண்டனுளொன்று திட்பமுடைத்தாதல் வேண்டும்.

அற்றேல் அஃதாக; வேதத்தில் ஆண்டாண்டுப் பிரமப் பொருளாகிய சிவபிரானுக்கும் உயிர்களுக்கும் அத்துவிதங் கூறிய தென்னை யெனின்; கருடனுமாந்திரிகனுந் தம்முள் வேறாதல் வெளிப்படையாயினும், கருடோகம் பாவனை விடத்தை நீக்கன்மாத்திரைக்கே வேண்டப்படும். அதுபோலச் சிவன் சீவன் என்னும் பதார்த்தங்கள் இரண்டும் தம்முள் வேறென்பது தேற்ற மாயினும், உயிர்களுக்கு மலநீக்கத்தின் பொருட்டு வேதத்தில் அத்துவித சிவோகம்பாவனை கூறப் பட்டது. இங்ஙனமாகலின், அதுகொண்டுதானே நிருபசரித ஐக்கியங் கூறுதல் சாலாது என்க.

சிவபிரான் பிரமனுடைய ஐந்தாஞ் சிரசைக்கிள்ளினர் என்றும், பிரமன் அரியிருவரும் அவருடைய திருமுடியினையுந் திருவடியினையுந் தேடி யுழன்றனர் என்றும், யாம் முழங்குவேம் அது மூடபுத்தியுடையார் அழுக்கறுத்தற்கு ஏதுவாக.

சோமக்கொடிக்கு விண்டுவின்மாட்டுச் செனகத் துவங் கூறியது கௌணவிருத்தி பற்றியாகலின், அது முக்கிய விருத்தி பற்றிச் சிவபிரானையே யடையும். சிவபிரானும் விட்டுணுவும் ஒருவருக்கொருவர் செனகராயின், வரம்பு கடந்து, நாமுஞ் சிவபிரானாகுவம். சிவபிரானு நாமாவர். பொருள்களி னியல்பை மாற்றுதல் சிவபிரானுடைய ஆணைக்கு மியலாதென்க. விட்டுணுமுதலிய தேவர் போற்பிறக்கக்கருதுதல் சிவபிரானுக்குஞ் செயற்கரியதொன்றாகும். அது அத்திரி பத்தினியால் வேண்டப் பட்டும் அவள் கருவிற் புக்குதிக்க மாட்டான்மையான் இனிது விளங்கும். விட்டுணு கருவிற்புக் குதித்தது சுவேச்சையெனின்;- கருப்பாசயத்திற் கட்டுண்டு நெடுங்காலங் கிடக்க எவனும் இச்சியான் ஆகலின், முற்பிறவியில் ஈட்டிய வினைக்கீடாகவே அவற்கு இச்சை நிகழ்ந்த தென்றொழிக. அற்றேல், பாரதமுதலிய வற்றில் விட்டுணுவுடைய அவதாரத்தைச் சுவேச்சையென்ற தென்னை யெனின்;- அது குணவாதம் என்க.

சிலர் பிரமனையும் சிலர் விட்டுணுவையும், சிலர் ஏனைத் தேவர்களையும் உபாசிப்ப, அவ்வுபாசனைகள் உலகத்திற் பயன்றருவனவன்றி வீடுபேற்றினைத் தாராவாம். "ஒருவன் ஆகாயத்தை ஆடையாக்கிக் கொள்ளுமாயின், சிவபிரானை உபாசியாது, துக்கத்தினீங்கி, வீட்டினைத்தலைப்படும்" என்று சுவேதாச்சுவதரச் சுருதிகூறுதலின், **வீடுபேற்றின் பொருட்டுச் சிவபிரானையே உபாசிக்க.**

*****_உடைந்த மரக்கலம் பிறிதொரு மரக்கலத்தைக் கரையடை விக்கமாட்டாது; அதுபோலப் பிறந்து இறந்து உழலுந்தேவர் அவ்வாறுழலும் எம்மனோர்க்குச் சரணாக மாட்டார். முயலிற் கோடும், ஆகாயத்திற்பூவும், கானலினீரும், மலடி மாட்டு மகப்பேறும் உளவாயின் ஏனைத்தேவரை உபாசித்தலான் வீடுபேறுந் தலைப்படும் என்க._

தேவருடைய பலபிறப்புக்களை நோக்கும்வழி நமக்குக்கழி பேரச்சம் நிகழாநின்றது. ஆகலின், சிவபிரான் அப்பெற்றிய வாம் பிறப்புக்களைத் திருவிளையாட்டுக்கேனும் மேற் கொள்ளா தொழிக. சிவபிரான் மாட்டியாம் வேண்டிப்பெறும்

பேறிதுவே. சிவபிரானை யொழித்தொழிந்த தேவரைத் துதிக்கும் அறிவிலா ரென்கடவர்.

சிவனடியார் திருக்கூட்டத்தையே விரும்புவேம். பிள்ளை மைப்பருவத்துஞ் சிவனடியார் திருவடிப் பொடி கொண்டே மண்விளையாட்டயர்வேமுக்கு, ஆண்டானாகிய சிவபிரானைத் துதிக்க வலியில்லையேனும், அவர் திருவருள் கொண்டே அவரைத்துதித்தேம். அங்ஙனந் துதித்தேமுக்கு அடியார்க்கு எளி வந்த கருணை வள்ளலாகிய சிவபிரான், உபவீதம் போற்றரித் தருளிய புனிதஆடையினையும், திரிபுண்டரத்தினையும் உடையராய் வெளிநின்றருளி, தம்முடைய அநுசரரைக் கொண்டு பாயசான்னத்தைக் கொடுப்பித்தருளினார். அதனைப்பெற்றுண்டு, சொப்பன சமாதியோ என்று கருதி, யோகிகளைப் போலத் தெளிந்தேம்.


இந்நூலைப் படித்து, இதன் பொருளை உள்ளவாறு உணரப் பெறுவார்க்கு, கொள்ளற்பாலது பிறிதொன்றில்லை; அறிதற் பாலதும் பிறிதொன்றில்லை; எல்லாப்பேறும் இதனானே யுண்டாம்.

இந்நூல் சிவபிரானுக்கு ஓராரமாக, மக்களுக்கு வேத சிவாகமப் பற்றை விளைக்க, பசுநூற் பற்றைக்கெடுக்க சிவபிரான் றிருவடிப்பற்றை வளர்க்க.

சதுர்வேததாற்பரியசங்கிரகம் முற்றிற்று.

'(திரயங்கள்' திரயமென்று படிக்கற் பாற்று).

திருச்சிற்றம்பலம்





ஸ்ரீ ஹரதத்தர் சைவ ஸ்தாபனம்



தீப்பிழம்பு நடுவே
முக்காலி பீடத்தில்
ஹரதத்தர்



திருவாவடுதுறை ஆதீன 24 ஆவது
குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்